
ந. ஆதவன்

ந. ஆதவன்

# சாளரம்

யூன் — யூலை - 1991

அறிமுக விலை: 12 ரூபா



மாதாந்த இளையோர் இதழ்சுவடி

## சாளரம்

தொடர்பு முகவரிகள்

அலுவலகம்:—

சாளரம்
வேம்படி வீதி
யாழ்ப்பாணம்.

☐

அ. முருகேசு
றோ. க. த. க பாடசாலை,
புதுக்குடியிருப்பு.

☐

அ. கௌரிகாந்தன்
கிருஷ்ணபுரம்,
கிளிநொச்சி.

சாளரத்தில் வெளியாகும் போட்டிகளில் வெற்றிபெறும் முதலாமவருக்கு கல்வியோடு தொடர்புடைய நூல்கள் பரிசாக வழங்கப்படும்.

## உள்ளே.......

**கல்வியாளர் பக்கம்**
- ☐ சாக்குப்போக்கல்ல யதார்த்த உண்மை

**நூல் அறிமுகம்**
- ☐ நான்
- ☐ ஆதாரம்

**விளையாட்டு**
- ☐ ப்ளே - கேம் - ஸ்போட்ஸ்

**கல்வி**
- ☐ விபுலானந்தரை நினைவு கூர்வோம்
- ☐ கல்வியின் நோக்குப்பற்றி விபுலானந்தர் அபிலாசை
- ☐ தாயக மீட்பால் மாணவர்க்கு ஆவதென்ன?

**மொழி**
- ☐ தனித்தமிழ்
- ☐ அறிவியற் தமிழ்

**பொது அறிவு**
- ☐ பொதுஅறிவும் பொதுஅறிவுப் போட்டியும்

**பருவவயதினர் பக்கம்**
- ☐ மனம் விட்டுப் பேசுங்கள்
- ☐ குதம்பைச் சித்தரின் பதில்கள்

**வரலாறு**
- ☐ மறைக்கப்பட்ட வரலாறு
- ☐ யாழ். நூலக எரிப்பும் இன அழிப்பும்

**இயற்கை மாசுபடல்**
- ☐ வளைகுடா யுத்தத்தின் சுற்றுச்சூழல் பயங்கர வாதம்

**அரசியல்**
- ☐ சதாம் ஹுசைன் ஓர் அரேபிய ஒளி நட்சத்திரம்?

**பண்பாடு**
- ☐ குட்டிக்கதை
- ☐ சிறுகதை
- ☐ நிலாமுற்றம்
- ☐ கவிதை

ந. ஆதவன்.



# சாக்குப் போக்கல்ல- யதார்த்த உண்மை

மாணவ மணிகளே, உங்கள் வாழ்வின் மிக முகிக்யமான பருவத்தில், வாழ்வின் முன்னேற்றத்துக்கு முக்கியமானதாகக் கருதப்படும் சிந்தனை, உணர்ச்சி என்பவற்றை ஒழுங்குபடுத்தவும் மேம்படுத்தவும் தலையிடுகின்ற நிறுவனங்களே பாடசாலைகள். அங்கு நீங்கள் சந்திக்கும் உறவினரே ஆசிரியர்கள். பாடசாலை என்ற அச்சிலிட்டு ஆசிரியன் என்ற வனை பவன் உங்கள் ஆற்றலை வடிவமைக்கின்றான். அதுவே உங்கள் தனிவடிவமும் சமுதாய வடிவமும் என்பதை ஏற்றுக் கொள்ளுங்கள்.

பொறியியலாளர்களையும், மருத்துவர்களையும், கணிதமேதைகளையும், விஞ்ஞானிகளையும், தத்துவவாதிகளையும் இச் சமூகத்திற்கு வெளியீடு செய்த உற்பத்திக் களங்கள் பாடசாலைகளே, அங்கு தொழிலாளியாகவும், முகாமையாளர்களாகவும் பணியாற்றியவர்கள் ஆசிரியர்களே. நல்லாசிரியன் கூறுவான் ''என்னிடம் ஒரு மழலையைத் தாருங்கள்; நான் முழுமனிதனாகத் திருப்பித் தருவேன்'' என்று.

இந்த ஆசிரியன் முப்பது ஆண்டுகளுக்குப் பின்னும் சராசரி ஆசிரியனாகவே இளைப்பாறுகின்றான். தன் தனிமனித வாழ்வுக்கே போதாத ஓய்வூதியத்துடன் தொழிலிலிருந்து கரையொதுங்கி விடுகிறான். பலர் ரியூசன் சொல்லிக் கொடுக்கிறார்கள் என்பது உண்மையே. முழு ஆசிரியர்களில் இவர்கள் எத்தனை சதவிகிதத்தினர்? பெருங்கடலில் புளி கரைத்தது போல வறிய ஆசிரியர் குழாமுக்கு இந்த ரியூசன் சம்பாத்தியம்.

மாணவர்களே, நீங்கள் கூறுவதும் எனக்குக் கேட்கிறது.

''பாடசாலைகள் இயக்கமின்றித் தூங்கி வழிகின்றன. பல மணித்தியாலங்கள் ஆசிரியர்கள் இல்லாமல் அல்லது பாடசாலையில் இருந்தும் வகுப்பறைக்கு வராமல் நாம் வரண்டுபோய் விடுகிறோம். எங்கள் இளமையான மனித நாட்களை ஏன் அவர்கள் பாடசாலைக்குள் எங்களை வரும்படி அழைத்துப் பின் கதவுகளை இறுக மூடி விரயமாக்க வேண்டும்? எங்களின் பெருமதிப்புக்குரிய வளர்ச்சிக்காலம் விரயமாவதை மேன்மைத் தொழிலில் இருப்பவர்களால் ஏன் புரிந்துகொள்ள முடியவில்லை? சுற்றுமதில்களுக்குள் ஒருநாளின் பெருபபகுதி முழுவதும் எவ்வித கற்பித்தலுமின்றி எங்களை அடைத்து வைத்திருக்கும் போது எப்படி நாம் வெதும்பிப் போகிறோம் என்பதை ஏன் அவர்களால் உணர முடிவதில்லை? இந்த ஏமாற்றங்களின் தள்ளுவிசையே போதிய தளபாடங்களும், அழகிய மரங்களும். குடிதண்ணீர் வசதிகளும், மலசலகூட வசதிகளும், எங்கள் திறமைகளை வெளியே கொட்டிக் குவித்துக் காட்ட உதவும் கழகங்களும் நிறைந்த வசந்த பூமியான பாடசாலைகளிலிருந்து இவைஎதுவுமே இல்லாததனியார்கல்விநிறுவனங்களுக்கு எங்களைத் தள்ளிச் செல்லுகின்றது. அங்கேயும் அவர்கள் தமக்கிடையே காணப்படும் தொழிற்போட்டிகளில் வெற்றி பெறுவதற்காக விரும்பிய படியெல்லாம் நேர அட்டவணைகளையும், ஆசிரியர்களையும் மாற்றும் போது நாம் திக்கித் திணறிப் போகின்றோம் பின் மீண்டும் விண்ணப்பங்களுக்காய் பாடசாலைகளுக்கு நிரம்பிய விசுவாசத்துடன் (பெரிதும் அவ்வாறு நடிக்க முயல்கின்றோம்) அணிவகுத்து நிற்கின்றோம் இதை ஆசிரியர்கள் அவர்களை உள்வாங்கிய நிர்வாகத்தர் என்போர் விளங்கிக் கொண்டாலென்ன? பல ஆசிரியர்கள் கல்லூரி நிர்வாகம் தொடர்பான உதவிகளை ஆற்றவேண்டியிருப்பதால் கற்பிப்பதில்லை. பாடசாலைகளில் எத்தனை மாணவர்களின் ஏமாற்றத்தில் - வெறுமையில் அவர்கள் இத்தகைய புறக்கருமங்களை ஆற்றுகின்றார்கள் என்பதையும் உணர்வதில்லை. ஆசிரியரின் முதற்பணி கற்பித்தல் என்பதை உணரக்கூடிய தகுதியில் அவர்கள் இல்லையா? இன்னும் சிலரோ ரியூசனுக்குச் செல்லும் மாணவர் அதிகம் என்பதால் தாம் கற்பிக்க வேண்யதில்லை என எண்ணுகின்றனர். ரியூசனுக்குச் செல்லாத ஏழை மாணவர்க்குப் பாடசாலை ஆற்றும் பங்குதானென்ன?''

மாணவர்களே, உங்கள் ஏமாற்றம், கோபம், கவலை, வெறுமை என்பவற்றை நாம் மானசீகமாகவே புரிந்துகொள்கிறோம். இன்றைய சூழ்நிலையில் போதிய உணவின்றி, போக்குவரத்து வசதிகளின்றி, பாடஉபகரணங்களின்றி பாதுகாப்பின்றி வாழும் சூழல் உங்கள் கோபக் குரலைச் சற்றுக் கனமானதாகவே மாற்றியிருக்கிறது. ஆனால். அவர்களை நீங்கள் தனியாக நோக்காதீர்கள். இந்தக் கல்வி முறையும் அமைப்புசார் வசதியீனங்களும் அவர்களை வெகுவாகப் பாதித்தேயுள்ளன.

ஒரே கல்வித்தகுதிகள், சேவைக்காலம் என்பவற்றுடன் வங்கித் துறையிலோ, கூட்டுத்தாபனங்களிலோ தொழில் புரியும் தம் நண்பர்களுடன் ஆசிரியர்கள் தங்களை ஒப்பிட்டுப் பார்த்து ஏமாற்றத்தால் விரக்தியடைந்துள்ளனர். பலர் தமது சாதாரண சம்பள உயர்வுக்காகக் கூட போட்டிப் பரீட்சைகளில் பொருத்தமற்ற வயதில் தோற்ற வேண்டியுள்ளனர். தமது தொழிலின் சேவை மனப்பான்மை பற்றி வற்புறுத்துவோர் தமது பொருளாதாரக் கீழ்நிலையினை உயர்த்துவதற்கு உதவுவதில்லை என்ற மனவிரக்தி அவர்களிடமுண்டு. பாடசாலை நேரத்துக்குப் புறம்பாக ஆற்றும் எந்தவொரு கடமைக்கும் ஏனைய தொழிற்துறைகளில் இருப்பது போல மேலதிகக் கொடுப்பனவுகள் இல்லை. தகுதி, சேவைத்திறன் என்பவற்றின்

டிப்படையில் பதவியுயர்வுகள் தரப்படாதவிடத்து, தனிப்பட்ட செல்வாக்கினால் உயர்நிலைக்கு வந்தோர் அதிகாரம் பாவிப்பதை விரும்பாமையினால் செய லூக்கம் அற்றவராகின்றனர். பொருள்சார் தேவையி னால் ரியூசன் கொடுக்கின்றனர்.

ஆசிரியர்களின் அதிருப்திகளுக்கு மாணவர்கள் பொறுப்பல்ல. எனினும், ஆசிரியர்கள் திட்டமிட்டுத் தீங்கு செய்வதில்லை.

உங்கள் மனவேதனையை அவர்கள் தெரிந்து கொள்ளட்டும். நீங்கள் அவர்களை நேசியுங்கள். மதிப்பளியுங்கள், அவர்கள் மீண்டும் புதியவர்களாகி உங்களை நெருங்கிக் கற்பிப்பார்கள். அவர்களது பிரச்சனைகளின் தீர்வுக்கான குரல்கள் மெதுவாகக் கேட்கின்றன. அவை செயலுருப் பெறட்டும். ஆசிரி யர்கள் ஊக்கத்துடன் நிமிரட்டும். பாடசாலைகள் உயிர்த்தெழட்டும்

— மகரிஷி —

# குறுக்கெழுத்துப் போட்டி

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 13 | | | 14 | | ❊ |
| | ❊ | யி | ❊ | 8 | | | 15 |
| 2 | | | | | 9 | | |
| 3 | | | ❊ | ❊ | | ❊ | |
| 4 | | ❊ | 12 | ❊ | | ❊ | |
| | ❊ | 7 | | | ❊ | | ❊ |
| ❊ | 6 | | | ❊ | 10 | | 16 |
| 5 | | | | ❊ | ❊ | 11 | |

**இடமிருந்து வலம்:-**

1. இந்திய உபகண்ட பண்டைய மொழி
2. திராவிட மொழிக் குடும்பங்களில் ஒரு மொழி.
3. கூடுகட்டத்தெரியா பறவையின் செவிலித்தாய்.
4. இடப்பக்கம் ஒரு குறில் எழுத்தைச் சேர்த்தால் ஆலும், வேலும், பல்லுக்கு உதவுவது போல் இதுவும், இரண்டும், சொல்லுக்கு உறுதி.
5. பெண்கள் காலில் அணிவார்கள் அழகுக்காக; ஆண்கள் கைகளில் ஏந்துவார்கள் போருக்காக.
6. சுடலையிலும் ஆடுவானாம், ஊளி நடனமும் ஆடுவானாம்.
7. அப்பருக்கும், சுந்தருக்கும் இதைக்கண்டால் பிடிக்காது.
8. பிரமாணியத்தைப் பிறப்பித்த பண்பாடு.
9. பக்திப் பேரியக்கம் இம் மதத்தை தோற்கடித் தது.
10. பாணனின் பெண்பால் வலம், இடமாய் நிற்கி றது.
11. தூரத்தின் அளவு கோல்.
12. இது கூப்பிக் கும்பிட்டால் மதிக்கின்றோம் என்று அர்த்தமாகும்.

**மேலிருந்து கீழ்:-**

1. தமிழரின் பொற்காலம் எனக் கூறப்படும்.
6. பலதுக்கு எதிர்.
7. இதுவும், வைணவமும் ஓராற்றின் ஈர் பிரிவுகள்.
8. எடுத்ததற்கெல்லாம் இப்படிச்சொன்னால் பயித் தியம் என்பார்கள்.
9. மன அமைதி விரும்புவோர் இதுவும் சந்தடியும் இல்லா இடம் செல்வார்கள்.
12. சிரிப்பு தலைகீழாய் நிற்கிறது.
13. அதிகாலையில் இதைச் செய்தால் மனமும் உட லும் புத்துணர்ச்சி பெறும்.
14. அன்புக்குரியவரின் இந்த ஐந்தெழுத்துச் சொல் கிடைத்தால் ஆகா அது பேரின்பம்.
15. கேடுகெட்டசாதி அமைப்புக்கு இருக்கு வேதம் வைத்த வேதப் பெயர் தலைகீழாய் நிற்கிறது.
16. பாலகனின் இக்குடியை யாரும் வெறுப்பதில்லை.
17. ''சாதி மான்'' களுக்கு இதிலும் அடிமையிலும் எண்ணிலடங்கா ஆசை.

நூலறிமுகம்

# 'நான்' உளவியல் மஞ்சரி

**17ம்** பராயத்தை அடைந்துவிட்ட 'நான்' உளவியல் மஞ்சரி மாணவர்களுக்கு ஏற்கனவே அறிமுகமானது. எமது செயல்களைக் காரணத்துடன் நாம் புரிந்து கொள்ளவேண்டும்; அதேபோல் எம்மைச் சூழவுள்ள மனிதரையும் நாம் புரிந்து கொள்ளவேண்டும்; அப்போதுதான் குறிப்பிட்ட ஒரு கருமத்தில் எமது மனதை ஆழப் பதிக்க முடியும். அதேபோல் ஏனைய மனிதர்களை எம்மால் புரிந்து கொண்டு அவர்களுடன் தகுந்த முறையிலான உறவுகளைப் பேணவும் முடியும்.

ஆகவே, சிறு வயதில் இருந்தே மாணவர்களுக்கு உளவியல் படிப்பிக்கப்பட வேண்டியது அவசியமாகிறது. மாணவர் வாழ்க்கை என்பது மிக இனிமையானது; வாழ்க்கையின் எந்தக் கட்டத்திலும் கிடைக்கமுடியாத ஒரு கூட்டுத்தன்மைமிக்கது. இந்த இனிமையான கூட்டு வாழ்க்கையை முழுமைப்படுத்த பெற்றோரும், ஆசிரியரும் துணைநிற்கவும், வழிகாட்டவும் வேண்டும். 'நான்' உளவியல் மஞ்சரி இவ்வித வழிகாட்டலை வழங்க எடுக்கும் முயற்சி பாராட்டக் கூடிய ஒரு நடவடிக்கையாகும்.

தனிநபர் உளவியலுக்குப் பதில்- மாணவ உளவியல் தொடர்பான விடயங்களுக்கும் இடம் ஒதுக்குவது பற்றி 'நான்' கவ்னம் செலுத்துவது அவசியம்.

'நான்' மஞ்சரியின் உளவியல் பார்வை தனிநபர் சார்ந்த தனிநபர் உளவியலாகவே அமைந்துள்ளது. 19ம் நூற்றாண்டில் ஆதிக்கம் பெற்றிருந்த இவ் உளவியல் பார்வை இன்று அநேகமான உளவியலாளர்களால் நிராகரிக்கப்பட்டுவிட்டது. சமூகம் சார்ந்த சமூக உளவியலே இன்று ஏற்றுக் கொள்ளப்பட்டதொன்றாகியுள்ளது. உளவியல் சம்மந்தமான விழிப்புணர்வுகளையோ அறிவுறுத்தல்களையோ ஏற்படுத்தும் ஏடுகளற்ற இன்றைய தமிழீழ சூழலில் "நான்" சார்ந்த 'நான்' உளவியலின் பங்கு உளவியல் துறையின் வளர்ச்சிக்கு சாதகமான பல பங்களிப்புக்களைச் செய்த போதும் அதில் உள்ள 'நான்' போக்கையிட்டு விழிப்பாய் இருத்தல் அவசியம்.

'நான்' ஆசிரியர் வின்சன்ற்பற்றிக் O.M.I. B.A.

முகவரி: விலை ரூபா 10/-

'நான்' புனித வளனார் குருமடம்.
கொழும்புத்துறை
யாழ்ப்பாணம்

# ஆதாரம்

**இ**வ்வாண்டில் இருந்து வெளிவருகின்றது. சமூக, பொருளாதார, விஞ்ஞான ஆய்வு இதழாக தன்னை அறிமுகப் படுத்தியுள்ளது. இதுவரை இரு இதழ்கள் வெளிவந்துள்ளன.

எமது பொருளாதார வளங்கள் பற்றியோ, எமது சொந்த முயற்சியால் பிரயோகிக்கக் கூடிய தொழில் நுட்பங்கள் பற்றியோ எமக்கு எதுவுமே தெரியாது. அதற்குப்பதிலாக இறக்குமதி செய்யப்பட்ட தொழில் நுட்பம் பற்றி மாத்திரமே நாம் அறிந்துள்ளோம். இது எமது கல்வி அமைப்பின் குறைபாடேயாகும்.

தமிழீழ தேசிய வளங்கள், தேசிய பொருத்தப்பாடான தொழில் நுட்பங்கள் ஆகியவை பற்றி கவனம் செலுத்தி மாணவரும் மற்றோரும் கற்கக் கூடிய ஒரு பருவ இதழ் சுவடியாக வெளிவரும் 'ஆதாரம்' மாணவரின் கல்விக்கோர் ஆதாரமாகும்.

குறிப்பாக விவசாயம், பொருளியல் கற்கும் மாணவருக்கு இது அதிக பயன்படும். முன் சொன்னவை தொடர்பான தத்துவ கட்டுரைகளும்' நடைமுறை விளக்க கட்டுரைகள் வழிகாட்டல்கள் ஆகியனவும் இடம் பெற்றுவருகிறது.

வெளியீடு: தமிழீழ ஆய்வு நிறுவனம்.

விலை ரூபா 8/- மட்டுமே.

(அடுத்த இதழில் அறிமுகமாகும் இதழ்கள் 'சமூக விஞ்ஞான சுடர்' தமிழீழ மாணவர், 'கல்விக்கதிர்'.)

## வாக்கிய ஓவியப் போட்டி

கூட்டத்தில் கூடி நின்று
கூடிப் பிதற்றலன்றி
நாட்டத்திற் கொள்ளாரடி - கிளியே
நாளில் மறப்பாரடி

இரண்டிற்கு மேற்படாத ஓவியங்களால் இவ்வாக்கியம் சித்தரிக்கப்பட வேண்டும்.

விளையாட்டு

# ப்ளே (*Play*) கேம் (*Game*) ஸ்போட்ஸ் (*Sports*)

இம் மூன்று சொல்லையும் அநேகமாக நாம் விளையாட்டு என்றே கூறுகிறோம். ப்ளே (play) என்பது உண்மையில் விளையாட்டைக் குறிக்கிறது. என்னுடன் சேட்டை விடாதே என்பதற்கும் விளையாடாதே என்ற சொல்லையே பயன் படுத்துகிறோம். ஆங்கிலத்திலும் இது இவ்விதமாகவே உள்ளது.

கேம் (Game) என்ற சொல்லு குறிப்பிட்ட ஒரு விளையாட்டை, அல்லது விளையாட்டில் ஒரு ஆட்டத்தைக் குறிக்கிறது. இன்னும் ஒரு கேம் (ஆட்டம்) விளையாடுவோமா? உதைபந்தாட்டம் பார்ப்போமா? புட்போல் கேம் பார்ப்போமா என்று கூறுகிறோம். தமிழில் இது 'ஆட்டம்' என்ற சொல்லால் குறிக்கப் படுகிறது.

ஸ்போர்ட்ஸ் என்ற சொல்லைப் பயன் படுத்தும் இடங்களில் விளையாட்டுஎன்றே கூறுகிறோம். இங்கு தான் தமிழ்ச் சொல்லாக்காத்தில் தற்கால தமிழர்களின் குறைபாடு தென் படுகிறது. ஸ்போர்ட்ஸ் என்ற சொல்லின் எண்ணக் கருவையே நாம் புரிந்து கொள்ளவில்லை. அது விளையாட்டு என்ற எண்ணக் கருவையும் விட மிக ஆழ்ந்த, அகண்டத்துவ (விசாலமான) பரிமாணத்தைக் கொண்டதாகும். சென்னைப் பல் கலைக் கழகத்தின் ஆங்கில தமிழ் அகராதியில் ஸ்போர்ட்ஸ் என்ற சொல்லுக்கு பின்வரும் அர்த்தங்கள் தரப்பட்டுள்ளன.

ஸ்போர்ட் (Sport) - (பெயர்ச் சொல்) விளையாட்டு, பொழுது போக்கு, போட்டியில் பெருந்தன்மையும், நேர்மையுமிக்க சால்புடையவர்.

ஸ்போர்ட்டிங் (Sporting) (பெயரடை) விளையாட்டில் ஈடுபாடுள்ள; விளையாட்டுத்துறை) யில் அக்கறையுடைய; பெருந்தன்மையான, எதிரிக்கு நேர்மை காட்டுகிற;...

ஸ்போர்ட்ஸ்மன் (Sports man (பெயர்) போட்டி பந்தய ஈடுபாட்டாளர்; பெருந்தன்மையாளர்: விட்டுக்கொடுப்பவர்; வாழ்க்கையை விளையாட்டாக கருதுபவர்.

ஸ்போர்ட்ஸ் மன்லைக் (Sports man like) (பெயரடை) போட்டிப் பந்தய வீரனுக்குத் தகுதியான; போட்டி நேர்மையுடைய; ஏனையோர்க்கும் சரிநிகர் வாய்ப்பளிக்கின்ற; மன்னிக்கும் மறக்கும் பண்புடைய.

ஸ்போர்ட்ஸ் என்ற சொல்லின் எண்ணக்கரு விளையாட்டு (ப்ளே) என்ற சொல்லைவிட உயர்ந்த அர்த்தம் கொண்டது. சமுதாயத்தின் ஏனைய மனிதர்களுடன் ஒரு சுமுகமான உறவை ஏற்படுத்துவதில் இதுவும் ஒரு பயிற்சியாகும். ஸ்போர்ட்ஸ் மீட்டை (விளையாட்டுப்போட்டி) இந்த அர்த்தத்தில் புரிந்து கொள்வோம். அதற்குப் பொருத்தமான சரியான தமிழ் பதத்தை ஆக்க வேண்டியது தமிழறிஞர் கடமையாகும்.

# நுண்ணறிவுப் போட்டி




(1) ஆசிரியர் மாணவனுக்கு நல் முன்னுதாரணமாக / சிறந்த உபதேசியாக இருக்க வேண்டும்.

(2) மாணவன் ஆசிரியருக்கு கீழ்படிவுள்ளவனாக / மதிப்புக் கொடுப்பவனாக இருக்க வேண்டும்.

(3) துரோணர் ஏகலைவன் கதையில் பின்பற்றப் பட வேண்டியது ஏகலைவனின் குருபக்தி / பயிற்சித் திறன்.

(4) அறிவின் ஊற்று மூலம் நூல்கள் / நடைமுறை.

(5) தாய்மொழிக் கல்வியால் கற்பது சுலபமாகிறது / தாய்நாட்டுப் பற்று வளர்ச்சியுறுகிறது.

(6) மனிதனின் கல்வி இயற்கையை அடக்கியாள / இயற்கையுடன் இணைந்து முன்னேற பயன்பட வேண்டும்.

(7) கல்வி மனிதனின் பண்பாட்டை / அறிவை வளர்த்தெடுக்க உதவவேண்டும்.

(8) சிறந்த தொழில் நுட்பத்தைப் பயன் படுத்துவது கூடிய வருமானம் பெற / மனித உழைப்பின் வினைத் திறனை அதிகரிக்க.

(9) வளர்ந்து வரும் நாடுகளின் சிறப்புக் குணாம்சம் தாழ்ந்த பண்பாடு / வளர்ச்சி குன்றிய தொழில் நுட்பம்.

(10) தற்சார்பு பொருளாதாரமானது ஒரு நாடு தனது தேவை அனைத்தையும் தானே உற்பத்தி செய்து கொள்வது / தனது தேவைக்குப் பிறரைச் சாராது இருத்தல்.



# விபுலானந்தரை நினைவு கூர்வோம்

1991 விபுலானந்தரின் நூற்றாண்டு நினைவு ஆண்டாகும். சிறந்த கல்விமானாகிய இவர் தான் கற்ற கல்வியை தனது சொந்த சமூக அந்தஸ்தை உயர்த்திக் கொள்ளவும், சமூககதில் நின்று மிக மேலே சென்று எட்டாத இடத்தில் இடம்பிடித்துக் கொள்ளவும் பயன்படுத்திக்கொள்ளவில்லை. தேச எல்லைகளைக் கடந்து தமிழரின் கல்வி வளர்ச்சிக்காக அயராது உழைத்தார். பழமையைப் பாதுகாக்கும் தூணாக விளங்கவில்லை. பாரம்பரிய பண்பாடுகளை முற்றாகத் தூக்கி எறியும் பரதேசிப் புதுமைவாதியாகவும் இருக்கவில்லை. பழமையையும் புதுமையையும் இணைப்பதில் அறிவியல் முறையில் செயற்பட்டார். இத்துறையில் பல வெற்றிகளையும் ஈட்டினார். 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பகால கல்விமான்களில் இருந்து இவர் பல வகைகளில் வேறுபட்டவராகும். இவரின் நூற்றாண்டு நினைவைக் கொண்டாடும் முகமாக 'சாளரம்' இவர்பற்றி மாதமோர் கட்டுரையைத் தாங்கிவரும். நினைவுக் கட்டுரைகள் அனுப்பப்படுவதை வரவேற்கிறோம்.

## விபுலானந்த அடிகளாரின் வாழ்க்கைக் குறிப்புகள்

மட்டக்களப்பு மாவட்டத்தில் காரைதீவு என்னும் கிராமத்தில் 26.3.1892ல் பிறந்தார். மரணம் 19.7.1947ல். இவரின் கல்வித் தகைமைகள்:-

பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியர்.

பொறியியல் டிப்ளோமா.

பண்டிதர்.

லண்டன் பல்கலைக்கழக வெளிவாரிமாணவனுக அறிவியற்பட்டதாரி. கிராமகிருஷ்ண மடத்தில் பிரமச்சாரிய துறவறப் பயிற்சி,

இவரின் இயற்பெயர்;-

ஆரம்பத்தில் மயில்வாகனனுர்.

பின்னர் பிரபோத சைதன்யர்.

துறவியானபின் விபுலானந்தர்.

கல்விகற்ற நிறுவனங்கள்;-

ஆரம்பக்கல்வி தனது ஊரின் சைவப் பாடசாலை.

இடைநிலைக்கல்வி கிறிஸ்தவ ஆங்கிலப் பாடசாலை.

அண்ணாமலை பல்கலைக் கழகம். லண்டன் பல்கலைக் கழகம் (வெளிவாரி மாணவன்)

இராமகிருஷ்ண மடம்.

வகித்த பொறுப்புகள்;-

- இமயமலை பிரதேசத்தில் இருந்து 'பிரபத்து பாரத' என்ற பத்திரிகை ஆசிரியர்.
- ஆரிய திராவிட பாஷா அபிவிருத்திச் சங்க' அமைப்பாளர்களில் ஒருவர்.
- சென்னை பல்கலைக் கழக தேர்வுசபை அங்கத்தவர்.
- சென்னை பல்கலைக் கழக கலைச் சொல்லாக் கற்குழு.
- இலங்கை இராமகிருஷ்ண சங்க பள்ளிக் கூடங்களின் முகாமையாளர்.

- பல பள்ளிக்கூட அதிபர்- குறிப்பாக சிவானந்தா வித்தியாலயம், மட்டக்களப்பு.
- இலங்கை பல்கலைக்கழக தமிழ் பேராசிரியர்.
- சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழக தமிழ் பேராசிரியர்.
- இலங்கையில் தமிழை தமிழில் படித்து தமிழில் எழுத வேண்டும் என்பதை நடைமுறையிலிட காரணமாய் இருந்தவர்.
- இலங்கை அரசின் கல்விச்சபை கல்விநூற்சபை, பரீட்சை சபை ஆகியனவற்றின் உறுப்பினர்.
- 1936ல் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் நடைபெற்ற கலைச் சொல்லாக்க மகாநாட்டிற்குத் தலைமை தாங்கியவர்.
- 1925-10-28ல் முதலாவது பெண் பாடசாலைக்கான அத்திவாரக்கல்லை காரைதீவில் நாட்டியவர்.
- 1936ல் ஆனைப்பந்தி பெண்கள் ஆங்கிலக் கல்லூரி அமைப்பதற்குக் காரணமாக விளங்கியவர்.
- 1927ல் இராமனாதபுரத்து அரசர் தலைமையில் அமைந்த விசாரணைக் குழுவின் முன் சிதம்பரத்தில் பல்கலைக்கழகம் நிறுவப்படவேண்டும் என முதன் முதலில் சான்று பகன்றவர்.
- யாழ்ப்பாண ஆரிய திராவிட பாஷா விருத்திச் சங்கம் ஒரு பல்கலைக்கழக மூலக் கருவாகச் செயற்பட திட்டங்கள் வரைந்தவர்.
- யாழ்ப்பாணத்தில் தனிப் பல்கலைக்கழகம் வேண்டும் என்று வெளிப்படுத்தியவர். 'விவேகானந்தர்' மூலம் இதை வெளிப்படுத்தினார். 1947ம் ஆண்டிலேயே இது தொடர்பான பல கட்டுரைகள் வரைந்தார்.
- 1924ல் மாணவர் சங்கம் என்ற பெயரில் ஆரம்பித்த யாழ்ப்பாணபடித்த இளைஞர் சங்கத்தில் இவரும் ஒருவர்.
- 1927ல் யாழ்ப்பாணம் விஜயம் செய்த மகாத்மா காந்தியை வரவேற்ற யாழ்ப்பாண இளைஞர்சங்க வரவேற்புக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார்.
- 1928ல் யாழ்ப்பாண இளைஞர் சங்கத்தால் நடத்தப்பட்ட சமூக ஒருமைப்பாட்டு மகாநாட்டிற்குத் தலைமை தாங்கினார்.
- அவரால் வெளிக்கொணரப்பட்ட நூல்கள்
  1. யாழ் நூல் - இசைநூல்
  2. மதங்க சூழாமணி நாடக நூல்.
  3. ஆங்கில வாணி - இயற்றமிழ் நூல்.
  4. மேற்றிசை செல்வம்-அறிவியல் நூல்.
  5. விஞ்ஞானதீபம் - அறிவியல் நூல்.
  6. ஒதிசிய, ஏயினிய காப்பிய செய்யுளையும், மகாகவி தாகூரின் செய்யுள்களையும் உலகறியச் செய்தவர்.

# கல்வியின் நோக்குபற்றி விபுலானந்தர் அபிலாசை

அடிகளாரின் கல்விச் சிந்தனையில் நூல் சார் கல்விக்கு மாத்திரம் இடமிருக்கவில்லை. நாட்டின் உயர்வுக்கும், நலத்திற்குமேற்ற வகையில் மனிதனின் தனிப்பட்ட வளர்ச்சியை மட்டுமன்றி, சமூக நலநோக்குக் கொண்டதாகவும் கல்வி இருக்க வேண்டும் என்பது அடிகளாரின் எண்ணமாகும். விஞ்ஞானம் மாறுகின்றது சமுதாயம் மாறுகின்றது. வரலாற்று நோக்கு மாறுகின்றது வாழக்கையின் போக்கு மாறுகின்றது. அரசியல் குறிக்கோள் மாறுகின்றது வழக்கம் மாறுகின்றது. சட்டம் மாறுகின்றது. ஆனால் கல்விமுறை மட்டும் மாறாமல் இருக்கின்றது. உருப்போட்டு ஒப்புவிக்கும் கல்வி ஓராண்டுக்குள் செல்லாக் காசாகிவிடும் என்பது அடிகளாரின் கருத்தாகும். அறிவியற்கல்வி மூலம் தொழிற்கல்வி வளம்பெற வேண்டும் என்று விரும்பியவர். மேல் நாட்டாரின் செல்வ வளத்திற்கும், செல்வப் பெருக்கிற்கும் அறிவியற் கல்விமூலம் பெற்ற தொழிற்கல்வியே முக்கிய காரணம் என்பதை அடிகளார் அறிந்திருந்தார். எனவே தமிழ் மக்களின் முன்னேற்றத்திற்கும் அது அவசியமெனக் கொண்டே அடிகள் 'மேற்றிசைச் செல்வம், விஞ்ஞான, தீபம் என்பவற்றை தொடர் கட்டுரையாக எழுதி விழிப்புணர்வை ஏற்படுத்த முனைந்தார். விஞ்ஞான, தொழில்நுட்பக் கல்வியைத் தனது அன்னை மொழி மூலம் மாணவர்கள பெறவேண்டுமென்பது அடிகளின் கருத்தாகும். 1939 இல கலைச்சொல்லாக்கம் பற்றிய மகாநாட்டுக்குத் தலைமை தாங்கினார். தானும் அம் முயற்சிகளில ஈடுபட்டதை கவனிக்க முடிகின்றது.

"சிறிது காலமேனும் நம்சிறுவர்கள் அனைவரும் வெறும் பட்டங்களைப் பெறுவதற்குப் படிப்பதையும்,பன்னிரண்டுரூபாய்கட்டி பரீட்சையில் தோற்றுவதையும் நிறுத்தித் தமக்குப் பிழைப்புக் கொடுக்கக் கூடியதான கைத்தொழில்களைக் கற்கவேண்டும்'',

இவ்வாறு அடிகளார் தொழிற்கல்வியின் முக்கியத்துவத்தையும் தொழில் வசதிகளைப் பெருக்கவேண்டிய நடவடிக்கைகளையும் எடுத்துக் காட்டியுள்ளார்.

விபுலானந்த அடிகள் அமைத்த சிவானந்த வித்தியாலயத்திலும், அதனோடுஅமைந்துள்ள குருகுல மாணவரில்லத்திலும் தொழிற்கல்வியைச் செயன்முறைப்படுத்திக் காட்டிய பெருமை அடிகளைச் சார்ந்ததாகும். மாணவருக்கு அறிவியற் கல்வியையும், தொழில் நுட்பக் கல்வியையும் இணைத்து அவர் அங்கு செயற்படுத்தினார். இராமகிருஷ்ண தத்துவத்தால் உந்தப்பட்ட விபுலாநந்த அடிகளது வாழ்க்கை இலட்சியமாக மக்கள் சேவையே முக்கியம் பெற்று விளங்கியது. சமுக சமத்துவம், சமய சமத்துவம் என்பவற்றைக் கல்விமுலம்ஏற்படுத்தவேண்டும் என்ற எண்ணம் கொண்டவர் அடிகள். மக்களிடையே ஒத்துழைப்பையும் நட்புறவையும் வளர்த்து நாட்டின் ஒருமைப்பாட்டுணர்ச்சிக்குக் கல்வி உதவ வேண்டும். கல்விக் கருத்துக்கள் நம் நாட்டின் ஒருமைப்பாட்டுணர்ச்சிக்கு உதவ வேண்டும். கல்விக்கருத்துக்கள் நம் நாட்டில் புத்துணர்ச்சிபெற்று புதுவாழ்வு வாழ உதவக்கூடிய தேசியக் கல்வி முறையாக உருவாகவேண்டும் என்ற சுவாமி விவேகானந்தரின் கருத்துக்களுடன் அடிகளாரின் கருத்தும் இசைவு காண்கின்றது. விவேகானந்தர் போன்று அடிகளாரும் மக்கள் கல்வியின் அவசியத்தை உணர்ந்திருந்தார்.

# தாயக மீட்பால் மாணவர்க்கு ஆவதென்ன!

தொழில் நுட்பம் கற்கிறோம், உயிரியல் வேதியல் பயில்கிறோம், கலைகள் பயில்கிறோம். வர்த்தகம், கணக்கியல, முகாமைத்துவம், புள்ளிவிபரவியல் இன்னும் பிறவெல்லாம் விரைந்து கற்கிறோம். பாடசாலையில் பயின்றிடும் இவைகள்போதா தென்று கணணி பொறிமுறையியல் (Mechanism), மின்இயல் எலக்ரோனிக் அறிவியல் இப்படியும் பற்பல முயன்று பயில்கின்றோம். எதற்காக இதையெல்லாம் கற்றுத் தெளிகிறோம்.

தொழில் தேடிட, பொருளாதாரம் பெருகிட. இதில் என்ன சந்தேகம்? தமிழ்மாணவர்கள் சராசரியாக கல்வித்திறன் மிக்கவர்கள். இதனால் நாம் ஆசிய சராசரி திறனிலும் விடக் கூடுதலாகவே நல்ல புள்ளிகள் பெற்றுத் திறமைச் சித்தியும் எய்துகிறோம். ஆனாலும் எமக்குத் தொழில் கிடைக்கின்றதா? கிடைக்கின்றது. ஆனால் அது எமது சொந்த மண்ணில் அல்ல, மாற்றான் மண்ணில் தொழில் வாய்ப்புப் பெறுகிறோம். கௌரவமான தொழில், ஆக்கத்திறனுள்ள தொழில், கொழுத்த சம்பளத்துடனான தொழில்.

வீட்டைவிட்டு, உற்றார் உறவினரை விட்டு, ஊரையும் மண்ணையும் விட்டு அந்நியமான நிலையில் அந்நியநாடு செல்கிறோம். எமது உழைப்பை அந்நாட்டிற்கு வழங்குகிறோம், எமது உழைப்பின் பயனை அந்நாடு அனுபவிக்கின்றது. அந்நாட்டின் சமுக - பொருளாதாரம் வளர்ச்சிபெற நாமும் உழைக்கிறோம். எமது நாட்டின் சமுக - பொருளாதார நிலையிலோ எந்த குறிப்பிட்ட மாற்றமும் இல்லை: அது அப்படியே இருக்கிறது அதுவும் கடந்த நூறுவருடங்களாக அது அப்படியே இருக்கின்றது. எம்மால் பலன்பட்ட நாடோ செழித்து வளர்கின்றது. நன்றிக் கடனாக எமக்குச் சம்பளமும் தருகின்றது. சாதாரண சம்பளமல்ல கொழுத்த சம்பளம். கைநிறையச் சம்பளம்.

எமது சம்பளத்தின் ஒரு பகுதி நம் ஊர் வருகிறது. நாமோ ஆடிக்கெருமுறை ஆவணிக்

(24ஆம் பக்கம் பார்க்க)

# செயன் முறைத் திறனற்ற கல்வியா

(தொழில் நுட்பக்கல்வி அபிவிருத்தி ஆண்டு 1987 என்ற வெளியீட்டின் பின்னிணைப்பு - சில பகுதிகள்)

## அறிமுகம்

மாணவர்களை வாழ்க்கைக்குத் தயாரிப்பதையே பிரதான பணியாகக்கொண்டு கருமமாற்றி வரும் திரு. ச சுப்பிரமணியம் அவர்களை கல்வி ஆர்வலர்களுக்கு, நாம் புதிதாக அறிமுகஞ் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. புதியோர்களுக்கும்,



யாழ் மாவட்டத்திற்கு அப்பால் உள்ளவர்களுக்கும் இவ்விதமானதோர் அறிமுகம் அவசியம். தொழில் நுட்பம்–முறைசார் கல்வி, கல்வி அதிகாரியாக பதவி வகிக்கும் இவர் ஏனோ தானோ என்று கருமமாற்றுபவர் அல்ல. ஓர் இடத்திற்குத் தலையையும் இன்னோர் இடத்தறகு வாலையும் காட்டும் விலாங்கினத்தைச் சேர்ந்தவர் அல்ல. தொழில் நுட்ப கல்வி – முறைசார் கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகளில் இருந்து ஆரம்பித்தார். இன்று கல்வி அமைப்பு முற்றாக சீர்திருத்தப்பட வேண்டும் என்ற நிலைக்கு வந்து நிற்கிறார். இது தொடர்பாகஅவர் தமது கருத்தை வெளிப் படையாகவே முன்வைத்து வருகிறார் இது தொடர்பாக இவர் சில நூல்களையும் எழுதியுள்ளார். அவையாவன, 'முறைசாராக் கல்வியின் புதிய பரிமாணங்கள்', 'தொழில் நுட்பம்' (இரு வெளியீடுகள்), 'இலங்கையில் மூன்றாம் நிலைக் கல்வி வாய்ப்புகள்' 'வாழ்க்கைத்திறன்', 'பாடசாலை முகாமைத்துவம்' 'தமிழீழம் கல்விச் சீர்திருத்தத்திற்கான ஆலோசனைகள்'.

இவர் தற்போது கல்விச் சீர்திருத்தம் சம்பந்தமான நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகிறார். இவரின் முயற்சிகள் தொடர 'சாளரம்' வாழ்த்துகிறது.

1. கல்வியின் நோக்கங்களை அறிந்து கொள்வோம்

1. சமூக வழிப் படுத்தல்
2. தனியாற்றல்களை விருத்தி செய்தல்

1-1 சமூக வழிப்படுத்தலென்பது: ஒவ்வொருவரும் தாம் வாழும் சமூகத்தோடும் சூழலோடும் சேர்ந்து ஒன்றித்து வாழ்வதற்கு ஏற்ற குணாதிசயங்களுடைய பூரண மனிதனாக்கல்.

1-2 தனியாற்றல்களை விருத்தி செய்தலென்பது: ஒவ்வொருவரினதும் தனி ஆற்றல்களை விருத்தி செய்து சமூகத்திற்குப் பயனுள்ளதாக்கல்.

2 சமூக வாழ்வுக்கேற்ற பூரண மனிதனின் குணாதிசயங்களாவன:

1. அடிப்படை அறிவுடையவனாக இருத்தல்.
2. நாட்டின் நற்பிரசைகளாக விருத்தல்.
3. பொருளாதார வளமுடையவனாக விருத்தல்
4. சமூக நீதியுணர்வுடையவனாக விருத்தல்.
5. சமூகத்தோடு தொடர்புகொள்ளக் கூடியவனாக விருத்தல்.

2-1 அடிப்படை அறிவுடையவனாக விருத்தல் என்பது;

1. ஒவ்வொருவரும் தமது எண்ணங்களையும், தேவைகளையும், வெளிப்படுத்தக் கூடியதாக விருத்தல், அதாவது பேச, எழுத வாசிக்க அடிப்படைக் கணக்குகளைச் செய்யத் தெரிந்திருத்தலும் இவற்றுக்குப் பயன்படக்கூடிய புலனுறுப்புக்களைச் சரியாகப் பயன்படுத்தவும், தன்னுடலையும், பொதுச் சுத்தத்தையும் பேணக் கூடியதாகவும் இருத்தல்.
2. வேலை மாற்றம் செய்து ஒய்வு எடுக்கவும், அழகுக் கலைகளை இரசிக்கக் கூடியவனாகவுமிருத்தல்,
3. ஒழுக்கமுடையவனாகவும், புத்தி சம்பந்தமான நாட்டங்களையுடையவனாகவும் இருத்தல்,

2-2 நாட்டின் நற்பிரஜையாகவிருத்தல் என்பது:

1. ஒவ்வொருவரும் தமது வாக்குரிமையைச் சரியான முறையில் பயன்படுத்தத் தெரிந்திருத்தல்.
2. ஜனநாயக சமதர்மக் கொள்கைகளையும், எண்ணக் கருத்துக்களையும் வெளியிடக் கூடியவனாக இருத்தல்.
3. மாற்றுக் கொள்கையைக் கேட்பதிலும், புரிந்து கொள்வதிலும் பொறுமையைக் கடைப் பிடித்தல்
4. முடிவை எடுத்தலும், விவாதத்திலும், முடிவு எடுத்தபின் முடிவை நிறைவேற்றும் பொறுப்பை யாவவரும் ஏற்றுக் கொள்ளும் மனப்பாங்கைப் பெறுதலும்.
5. மனிதன் ஒவ்வொருவனையும் தன்னைப் போல் மதிக்காது பிரசாரங்களிலிருந்து ஏமாறாது உண்மையைக் காணும்

பகுத்தறிவை பெற்றிருத்தல்.

2-3 பொருளாதார வளமுடைய வனாக இருத்தலென்பது:

1. ஒவ்வொரு மனிதனும் தனது வாழ்க்கையை நடாத்துவதற்குத் தேவையான பொருளாதார வளத்தைப் பெற்றுக் கொள்ளக் கூடிய ஒரு தொழிலைத் தெரிந்து அதைத் திறமையாகச் செய்யத் திட்டமிட்டு முயற்சிக்கக் கூடிய வனாகவிருத்தல்.

2. சமூகத்தில் ஆற்றப்படும் தொழிலின் மதிப்பை இரசித்தல்.

3. பொருள்களை வழங்குவதிலும், விற்பதிலும் ஏற்ற அறிவுடையவனாக இருத்தல்.

3 சமூக நீதியுணர்வுடையவனாயிருத்தலென்பது

1. சமூக நீதிக்காகவுழைத்தல்

2. சமூகத்தில் திருப்தியீனமான நிலைகள் ஏற்பட்டால் அதைத் திருத்துவதற்கு முயற்சி செய்தல்

3. தேசத்தின் செல்வங்களைப் பாதுகாக்கும் உணர்வுடையவனாயிருத்தல்

4. ஒழுங்கானதென ஏற்றுக் கொள்ளப் பட்ட சட்டங்களுக்கு அமைந்து நடத்தல்.

5. ஜனநாயக இலட்சியங்களுக்கு மதிப்புக் கொடுத்தல்

**4. தொடர்பு கொள்ளக்கூடியவனாகவிருத்தலென்பது:**

1. தாய், தந்தை, சகோதரர், சுற்றத்தார், ஆசிரியர், பெரியார் போன்று மற்றவர்களையும் மரியாதை செய்யும் பழக்கங்களையுடையனவாகவிருத்தல்

2. வீட்டில் வாழ்வோருடன் சந்தோஷமாக வாழக் கூடியவனாக விருத்தல்

3. பாடசாலை, சனசமூக நிலையங்கள் போன்ற குழுக்களில் ஒத்துழைத்துத் தனது சேவையைக் கொடுக்கக் கூடியவனாக விருத்தல்

4. கூட்டுத் தாபனங்கள், கிராமச் சங்கங்கள் போன்ற குழுக்களில் ஒத்துழைத்துத் தனது சேவையைக் கொடுக்கக் கூடியவனாக விருத்தல்.

5. சர்வதேச ரீதியால் பலதரப்பட்ட சாதியாரோடும் தொடர்பு கொள்ளக் கூடியவனாகயிருத்தல்.

**5. கல்வியின் நோக்கங்களை நிறைவு செய்யவுதவு வோரையும் ஸ்தாபனங்களையும் அறிந்து கொள்வோம்**

1. தாய், தந்தை, சுற்றம் சூழல், ஆசிரியர், பாடசாலை நூல் நிலையம் பத்திரிகை, வானொலி, தொலைக் காட்சி, ஆலயம் தொழில் செய்யுமிடம் போன்றன.

2. நாம் ஏன் கற்கவேண்டும்? சமூகத்தோடு சேர்ந்து வாழ்வதற்கேற்ற குணாதிசயங்களுடைய பூரண மனிதனாகவாகும்.

4. ஒவ்வொருவரும் பொருளாதார வளமுடையவனாக விருக்கத் தேடிக்கொள்ள வேண்டியது தொழிலாகும்.

5. தொழிலொன்றைத் தேடிக் கொள்ள நாம் பெற்றிருக்க வேண்டிய குணாதிசயங்கள்:

1. தொழில் பற்றிய அறிவு

2. கைத்திறன்

3. நல் மனப்பாங்கு

**6. மாணவர் நம் நல் வாழ்வுக்கு வழி காட்டக்கூடிய பின்வரும் கோலங்களை வாய்மொழிவோம்**

☐ எம்மை வாழ்க்கைக்குத் தயாராக்குங்கள்

☐ எம்மை அடிப்படை அறிவு, பொருளாதார வளம் சமூக நீதியுணர்வு நாட்டின் நற்பிரசை ஆகிய குணாதிசயங்களுடைய முழு மனிதனாக்குங்கள்.

☐ எமது தனி ஆற்றல்களை வளர்க்க உதவுங்கள்

☐ எம்மைப் புத்தகப் பூச்சிகளாக் காதீர்.

☐ எமது விருப்புக்கும், திறமைக்கும் அப்பாற்பட்ட உங்கள் அபிலாசைகளை எம்மீது திணிக் காதீர்கள்.

☐ பரீட்சைப் பெறுபேறு மட்டும் எம்மை முழு மனிதனாக்காது.

☐ செயல்மூலம் உணர்தலே சிறந்த கற்றல். செயல்மூலம் உணர்விப்பதே சிறந்த கற்பித்தல்.

☐ நாமாகவே சிந்திக்க அனுமதியுங்கள்

☐ உடல் உள நன்மனப்பாங்கு விருத்தியே நமக்கு வேண்டும்.

☐ தொழில்கள் யாவும் வாழ்வை நிறைவு செய்ய மேற்கொள்ளும் சேவையே

☐ கைத்தொழில்களில் ஈடுபடுவது தாழ்வானது அல்ல

☐ எமது விருப்புக்கும் ஆறுதலுக்கும் ஏற்ற தொழில் ஒன்றைத் தெரிவுசெய்து பொருளாதார வளம் பெருக்க எம்மை அனுமதியுங்கள்

☐ உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது.

''கைத்தொழி லொன்றைக்
கற்றுக் கொள்:
கவலை உனக்கில்லை
ஒப்புக்கொள்:
எத்தொழில் எதுவும் தெரியாமல்;
இருப்பது உனக்கே சரியாமோ:''

# தனித் தமிழ்

தொன்மை மிக்க உலக மொழிகளில் தமிழ் மொழி தனிச் சிறப்பு மிக்கது. இந்திய உபகண்டத்தில் உள்ள வளர்ச்சி மிக்க, தொன்மை மிக்க மொழிகளில் இன்னமும் அழியாமல் உருமாறாமல் பாவனையில் இருக்கும் வளமிக்க மொழி தமிழ் மொழி மாத்திரமேயாகும்.

இவை எல்லாம் உண்மை. ஆனால் தமிழரின் கடந்த சுமார் ஆறு நூற்றாண்டுகளாக அரசியல் உரிமையற்றிருந்த காரணத்தால் சமஸ்கிருதமும், ஆங்கிலமும் அவனின் மொழியைச் சிதைத்து வருகின்றன. வழக்கொழிந்துபோன சமஸ்கிருதம் கூட தமிழ் மொழிக்குத் தொல்லை கொடுக்கும் அளவிற்குத் தமிழ் மொழி பலவீனமடைந்து விட்டது. சமஸ்கிருத சொற்களும், ஆங்கிலச் சொற்களும் தமிழில் தாராளமாகவே கலந்துவிட்டன. தமிழ் மொழியில் உள்ள இந்தக் கலப்படம் அகற்றப்பட வேண்டும்.

ஒவ்வொரு சொற்பதமும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டது. தனித் தமிழைப் பயன்படுத்தும்போது தமிழ் மொழியும் வளரும். அதன் சொல் வளங்கள் அதிகரிக்கும். தமிழைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் அச் சொல்லை விளங்கக் கூடியதாயும் இருக்கும். இதனால் அவர்களின் ஆக்கசக்தியும் வளர்ச்சி பெறும்.

உதாரணமாக, வித்தியாலயம் ஒரு வட மொழிச் சொல், வித்தியா என்பது அறிவைக் குறிக்கும் வடமொழிச் சொல்லாகும். நாம் வித்தியாலயம் என்பதைப் பயன்படுத்தும் போது அதன் அடிச் சொல் என்ன என்பதை அறியாமலேயே பயன்படுத்துகிறோம், வித்தியாலயம் என்பதற்குப் பதிலாக அறிவாலயம் என்ற சொற்பதம் நாம் சொல்ல வருவதைத் தெளிவாக விளங்கவைக்கிறது.

சுமார் ஆறு நூற்றாண்டுகள் பழகி வந்த பழக்கத்தைத் திடீர் என்று கைவிடுவது சிரமம்தான். ஆனால் சொந்த சொற்களை மறந்து அந்நிய சொற்களை எம்மை அறியாமலே பயன்பாட்டுக்கு கொண்டு வந்த எம்மால், மனம் வைத்தால் நாமாக அறிந்து எமது சொந்த சொற்களை மீண்டும் பயன்பாட்டுக்கு கொண்டுவருதல் ஒன்றும் சிரமமாய் இருக்க மாட்டாது.

அறிவியலினதும், சமுதாயத்தினதும் வளர்ச்சி இதுவரை நாம் அறிந்திராத பல எண்ணக் கருக்களை எமக்கு அறிமுகப் படுத்துகிறது. இந்த எண்ணக் கருக்களுக்குச் சொற்பதங்கள் தேடவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. ஆகவே நாம்வேறு மொழியில் கண்டு பிடிக்கப்பட்ட சொற்பதங்களை அப்படியே நேரடி மொழிபெயர்ப்புச் செய்வதை விடுத்து புதிய சொற்பதங்களை ஆக்கவேண்டும். அதற்குரிய தமிழ் அடிச்சொற்பதங்களைத் தேடிப்பிடித்து அமைத்துக் கொள்ள வேண்டும்.

'சாளரம்' முடிந்தளவிற்குத் தனித் தமிழ் சொற்பதங்களையே பயன்படுத்தும். அவசியமேற்படின் புதிய சொற்பதங்களைப் பயன் படுத்தும். இச் சொற்பதங்கள் விவாதத்திற்கு உள்ளாக்கப்பட்டுக் காலப்போக்கில் மாற்றப்படலாம்.

## அறிவியல் தமிழ்

1936 ஆம் ஆண்டு சென்னை பச்சையப்பன் மன்றத்திலே தமிழிற் கலைச் சொல் ஆக்கம் செய்வதைப் பற்றிய வழிவகைகளை ஆராயத் தமிழ் அறிஞர் கூடினர். அக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய விபுலானந்தரின் கருத்துக்களில் ஒரு பகுதி பின்வருமாறு,

''நமது தாய்மொழி பழமையும்சிறப்பும் பொருந்தியது. அதனில் எல்லாக் கலைச் சொற்களையும் ஆக்க வசதியுண்டு. அறிஞர் அவசரப்படாமல் நன்கு ஆராய்ந்து கலைச் சொற்களை அமைக்க வேண்டும் தமிழில் வெளிவரும் கலைச் சொற்கள் எளிதிற் புரிவதில்லை. என்று கூறுவது தவறு. இன்று புரியாத ஒன்று நாளை புரியும். பழகப் பழக எல்லாச் சொற்களும் எளியவைகளாகி விடும். ஆதலின் அறிஞர் முயன்று தமிழிற் கலைச் சொற்கள் ஆக்குதல் நல்ல முயற்சியாகும்.''

அடிகளின் இச் செவ்விய உரையை நம் சிந்தையில் ஏற்றுச் செயற்படின் எம் செந்தமிழ் சிறப்புறும்.

## நூலக எரிப்பு....

(14ஆம் பக்கத் தொடர்ச்சி)

சுண்டிக்குளி, வண்ணார்பண்ணை, முஸ்லிம் கல்லூரி நல்லூர், நாவலர் மண்டபம் ஆகிய இடங்களில் இயங்கி வருகிறது. சுண்டிக்குளியில் இயங்கும் வை. எம். சீ. ஏ கட்டத்துக்கு வாடகை செலுத்தப்படுகின்கின்றது, ஏனையவை மாநகரசபைக்குச் சொந்தமான கட்டடங்கள்.

புதிய நூலகமொன்று கட்டுவதற்கு இரண்டு லட்சத்துத் தொண்ணூற்றையாயிரம் ரூபா தேவைப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

# பொது அறிவு

இச் சொற்பதமே இதன் அர்த்தத்தைச் சரியாகச் சுட்டி நிற்கிறது காலஞ்செல்லசெல்ல அறிவு பற்பல தனித்தனித் துறைகளாக பிரிகின்றன. ஆரம்பத்தில் சமூகக்கல்வி, வரலாறு, அறிவியல் எனப் பிரிகிறது. பின் அரசியல், பொருளாதாரம், வர்த்தகம், உயிரியல், சமூகவியல், புள்ளிவிபரவியல், மானுடவியல், தூயகணிதம், பிரயோக கணிதம், அட்சர கணிதம் இவ்வாறு பற்பலவாக விரிகிறது. அதன் ஒவ்வொரு கிளைகளும் மேலும் பல உபகிளைகளாகப் பிரிகின்றன. தனிமனிதர்கள் ஏதோ ஒரு துறையில் மாத்திரமே விசேடபயிற்சியும் புலமையும் பெறுகிறார்கள். இதற்கு விதிவிலக்கானவர்களும் உண்டு. பல் வைத்தியன் பல் சம்பந்தப்பட்ட துறையில் புலமை பெறுகிறான், நரம்பு மண்டல வைத்தியன் தனது துறையில் நிபுணத்துவம் பெறுகிறான், உளவியலாளன் உளவியற் துறையிலும், கண் வைத்தியன் கண் காது மூக்கு சம்பந்தப்பட்ட துறையிலும் நிபுணத்துவம் பெறுகிறான். இவ்விதம் நிபுணத்துவம் பெற்றவன் தனது துறையைப்பற்றி மாத்திரம் தெரிந்தவனாக இருக்கக்கூடாது என்பதே அறிவின் எதிர்பார்ப்பாகும்.

அவன் மனிதனின் உடற்கூறியல் பற்றி தெரிந்தவனாக இருக்கவேண்டும், அடுத்ததாக அவன் உயிரியல்பற்றி பொதுவாக தெரிந்திருக்கவேண்டும். அடுத்ததாக அவன் ஆய்வுக்கும், சிகிச்சைக்கும் பயன்படுத்தும் கருவிகள் பற்றிப் பொதுவாகத் தெரிந்திருக்க வேண்டும். அவை சடப்பொருள், சக்தி ஆகிய அறிவியலுடன் தொடர்புபட்டவை. அடுத்ததாக நோய்கள் சமூகத்தின் சுகாதார நிலையுடன் தொடர்புபட்டவை. சுகாதாரம் சமூகத்தின் பொருளாதார, கலாச்சார நிலமையுடன் தொடர்புபட்டது. ஆகவே அவன் சமூகம் பற்றியும் தெரிந்திருக்க வேண்டும். அடுத்ததாக இவன் வைத்தியம் செய்யப்போவது மனிதர்களுக்கும், உயிர் வாழ் ஜந்துக்களுக்குமே தவிர உயிரற்ற சடத்துக்கல்ல, ஆகவே உயிருள்ள ஜீவராசிகளுடன் எவ்விதம் பழகுவது என்பதைத் தெரிந்திருக்க வேண்டும். இவன் ஒரு குறித்த துறை நிபுணன் என்பதற்காக சமூகத்தின் அரசியல், கலாச்சார விவகாரங்களில் இருந்து ஒதுங்கி நிற்க முடியாது அதுபற்றியும் அவனுக்கு நிச்சயமாகத் தெரிந்திருக்க வேண்டும். இவ்விதமான அறிவே பொது அறிவு எனப்படும்.

ஒவ்வொரு மாணவனும் குறிப்பிட்ட ஒரு துறையில் நிபுணத்துவம் பெற முற்படும் அதேவேளையில் தான் வாழும் சமூகத்தைப் பற்றியும், தனது சூழல் பற்றியும், உலகின் பொதுவான வளர்ச்சி பற்றியும் புரிந்திருக்கவேண்டும்.

கடந்த சித்திரைமாதம் 12-ம் திகதி அன்னை பூபதி நினைவுப் பொது அறிவுப்போட்டியில் கேட்கப்பட்ட வினாக்கள் இத்தன்மை பெற்றதாகவே இருந்தமை வரவேற்கத்தக்கது. இந்தக் கோணத்தில் இருந்து நோக்கிப் பொது அறிவு ஒரு பாடமாகப் பாடசாலைகளில் போதிக்கப்படுமானால் மிகவும் பலனுள்ளதாய் அமையும்.

## பொது அறிவுப் போட்டி

'சாளரம்' பொதுஅறிவுப் போட்டியில் ஈடுபடும் மாணவர்கள் உங்கள் முயற்சியைக் கொண்டு தேடி விடையைக் கண்டு பிடிக்க முற்படுங்கள். பதில்களை வெள்ளைக் கடதாசியில் எண்களைச் சரியானபடி குறித்து எழுதி அனுப்பவும்.

கேள்விகள்;- (1) பிரித்தானியரின் ஆட்சியின் கீழ் முழு இலங்கையும் உட்பட்டிருந்த காலத்தில், இலங்கைத் தீவின் அனைத்து மக்களும் பிரித்தானியரால் அடக்கப்பட்டார்கள். இந்த அடக்கு முறை நிறுவப்பட்டு பலப்படுத்தப்பட்ட பின்னர் 20-ம் நூற்றாண்டின் முற்பகுதிவரை பிரித்தானியரின் அரசியல், பொருளாதார, இராணுவ ஆக்கிரமிப்புக்கு எதிராக எதுவித எதிர்ப்புக்களும் காட்டப்படவில்லை. ஆனால் கலாச்சார ஆக்கிரமிப்புக்கு எதிரான எதிர்ப்புக் குரல்கள் கிளம்பின. ஏறத்தாள ஏககாலத்தில் தமிழ், சிங்கள, முஸ்லிம் பெரியார்கள் சிலர் முன்வந்தார்கள்

1·1 மூன்று இனத்திலும் ஒவ்வொரு பெரியாரின் பெயர் தருக

1·2 அவரைப்பற்றி மூன்று வசனங்கள் தருக.

(2) மகாவலி அபிவிருத்தித்திட்டம் வடமாகாணத்தில் பெரும்பகுதியை உள்ளடக்கியிருந்தது. அது யாழ் குடாநாட்டினுள்ளும் நீட்டப்பட்டிருந்தது. ஆனால் ஜே ஆர் அரசாங்கம் குறிப்பிட்ட ஒரு காரணத்தை முன்வைத்து இவற்றில் பெருமளவான திட்டங்களை நிறுத்தியது. யாழ்குடாநாடும் புறக்கணிக்கப்பட்டது அக் காரணம் எது? மூல மகாவலி திட்டத்தால் வடமாகாணத்திற்கு ஏற்படவிருந்த பலாபலன்கள் ஐந்து கூறுக.





# மனம்விட்டு பேசுங்கள் மனச்சுமை போக்குங்கள்

**ப**ருவ வயது என்பது மனிதனின் உடலிலும், மனதிலும், சிந்தனையிலும் பல்வேறு வகைப்பட்ட துரிதமாற்றங்களை ஏற்படுத்தும் வயதாகும். 15க்கும் 17க்கும் இடைப்பட்ட இந்த பருவம் பல மனக் குழப்பங்களையும் தடுமாற்றங்களையும் கொண்டிருக்கும். ஒவ்வொரு தனி மனிதனினதும் எதிர்கால வாழ்க்கையின் திசைவழி எவ்விதமாய் அமை யவேண்டும் என்பது தீர்மானிக்கப்படுவது இந்த வயதுகளிலேயே ஆகும். இதுதான் பால் உறுப்புகள் செயற்படத் தொடங்கும் வயதாகும். இச் செயற்பாடு மனிதனின் உடல், குடல், சிந்தனை, மனம் ஆகியவற்றுடன் தொடர்பு பட்டதாகும். பருவக் கோளாறுகள் எனச்சொல்லப்படுபவை நடைபெறும் வயது இதுவேயாகும்.

அறிவின்மையும், பல விடயங்களை அறிய வேண்டும் என்ற பூர்த்திசெய்யப்படாத அவாவும், கூச்சமும், தவறான வழிகாட்டல்களும் பல இளைஞர்களையும், யுவதிகளையும் சீரழித்து வருவதை நாம் யாவரும் அறிவோம்.

மாணவர்களே! மாணவிகளே! இளைஞர்களே !

உங்கள் தடுமாற்றங்கள், மனக்குழப்பங்கள், விடைகாண அவாவும் கேள்விகள் போன்றவற்றை எழுதி அனுப்பினால் நாம் அதற்கான தீர்வுகளை வழங்கி உதவுகிறோம். உங்கள் பெயரோ சொந்த முகவரியோ போட வேண்டிய அவசியமில்லை. உங்கள் பிரச்சினைகளையும் அப் பிரச்னைகளையும் நாம் புரிந்து கொள்வதற்கு அவசியமான சுற்றுடலையும், தகவல்களையும் எழுதி அனுப்பவும். பத்திரிகை வாயிலாகவே பதில் தருகின்றோம். உங்கள் பிரச்னையை வெளிக்கொணர கூடிய முறையில் உங்கள் கடிதம் நீண்டதாய் இருந்தாலும் கவலையில்லை. நாம் அவசியமான பகுதியை மாத்திரம் சுருக்கிக் கடிதத்தைப் பிரசுரித்துப் பதிலும் தருகின்றோம். இதழ்சுவடிவாயிலாக பதில் தருபவர் குதம்பைச்சித்தர்.

குதம்பசித்தரின் கவனத்திற்கு:

நண்பா!

பெண்பாலைச் சேர்ந்த எனது வயது 16.

எனது தந்தையார் சிறு வயதிலேயே இறந்து விட்டார். ஆண் சகோதரமும் இல்லை. நானும் எனது தங்கையும் அம்மாவின் பராமரிப்பிலேயே வளர்ந்தோம். தோட்டம் செய்வதே எமது ஜீவனம். எந்த ஆண் உறவினராலும் உதவியும் இல்லாத படியால் நாங்களே எங்கள் விவகாரத்தைக் கவனித்துக் கொள்வோம். ஆண்களுடன் மிகவும் சகஜமாகப் பழகுவோம். என் அம்மாவும் அவ்விதந்தான், நானும் அவ்விதந்தான். கிராமத்தில் எமக்கு இது ஒரு பிரச்சனையாக வரவில்லை. ஆனால் இப்போது பாடசாலையில் என்னைச் சில மாணவர்களும், ஆசிரியர்களும், ஒரு மாதிரிப் ப ' க்கிறார்கள். நான் பெரிய பிள்ளை ஆகிவிட்டேனாம். ஆண்களிடம் இருந்து ஒதுங்கித்தான் வாழ வேண்டுமாம். அம்மா அப்படி ஒன்றும் கூறுவதில்லை. சிலர் என்னைக் கேலியும் செய்கிறார்கள். வேறு சிலர் ஏதோ வேண்டத்தகாத ஒன்றைப் பார்ப்பதைப் போல் என்னைப் பார்க்கிறார்கள். மாணவர்களில் ஒரு சிலர்தான் அப்படியென்றால் மாணவிகளில் சிலர் கூட இப்படித்தான் என்னைப் பார்க்கிறார்கள். எனக்கு என்ன செய்வது என்று புரியவில்லை பாடசாலைக்குச்செல்லவே மனச் சங்கடமாகவுள்ளது. பாடசாலைக்குச் செல்வதை நிறுத்தி வீட்டோடையே இருப்போமா என்றும் தோன்றுகிறது. குதம்பச்சித்தரே உங்கள் ஆலோசனை என்னவென்று அறியலாமா?

இங்ஙனம்

மனோசித்திரவதைப் படும் ஒரு மாணவி.

*மனோசித்திரவதைப்படும் மாணவியே!*

*பெண்ணுக்கு பாதுகாப்பு ஆண்தான் என்பதே எமது சமூக வழக்கமாகும். இந்த வழக்கமே எமது கலாச்சாரமாகவும் மாறியுள்ளது. இந்த சமூக வழக்கம் தவறானது என்பதை உங்கள் குடும்ப செயற்பாடு எடுத்துக் காட்டிவிட்டது. ஆண்களுடன் சரிசமனாக பழகும் தன்மையை உனது குடும்பம் உனக்குத் தந்துள்ளது. இன்னும் பழமையில் ஊறியிருக்கும் பெரும்பான்மையினருக்கு இதை ஜீரணிப்பது கடினமானதுதான். அவர்களின் மடமையைக் கண்டு நீ' உன் வாழ்கையில் பின் வாங்கிவிடாதே பாடசாலைக் கல்வியை இடைநிறுத்தி விடாதே. ஆண்களுடன் சமனாக பழகும் வாய்ப்பில்லாப் பெண்கள்தான் அடிக்கடி வாழ்க்கையில் ஆண்களால் ஏமாற்றப்பட்டு விடுகிறார்கள். ஆனால் ஆண்களுடன் சர்வசாதாரணமாகப் பழகும் தன்மையுள்ள பெண்கள் ஆண்களை நன்றாக அறிந்து படிக்சக் கூடியவர்கள். அவர்களை யாரும் இலகுவில் ஏமாற்றி விட முடியாது. ஆகவே நீ உன் பழக்கத்தை மாற்றிக் கொள்ளவும் தேவையில்லை பாடசாலையில் இருந்து பின்வாங்கவும் தேவையில்லை என்பதே எனது கருத்தாகும்.*

(24ஆம் பக்கம் பார்க்க)

# வரலாறு பற்றி
# 'சமூகக் கல்வி — ஆண்டு-7'

## மறைக்கப்பட்ட வரலாறு

வரலாறுபற்றிய பாடநூல்களில் காணக் கிடக்கும் தப்பான கருத்துக்களை ஆராய்வதே இப்பக்கத்தின் நோக்கமாகும்.


சமூக கல்வி ஆண்டு-7 நூலில் அத்தியாயம் 10ல் இருந்து அத்தியாயம் 17வரையான எட்டு அத்தியாயங்களும் போர்த்துக்கேயரின் வருகைக்கு முன்னான (கி.பி.1505க்கு முன்பான) இலங்கை வரலாற்றைப் பற்றிக் கூறுகின்றது: 16ம் அத்தியாயம் வரை யாழ்ப்பாண இராச்சியம் இருந்தது சம்பந்தமான எந்தத் தகவலும் இல்லை. 17ம் அத்தியாயத்தில் திடீர் என யாழ்ப்பாண இராச்சியம் பற்றிய கூற்று வருகின்றது.

11ம் பக்கத்தில் யாழ்ப்பாண இராச்சியம் பற்றிய பின்வரும் தகவல்கள் காணப்படுகின்றன.

''யாழ்ப்பாணத்தில் அதிகாரத்தைக் கைப்பற்றிய ஆரியச் சக்கரவர்த்தி அரசரின் அச்சுறுத்தல் இக்காலப் பகுதியில் முக்கியத்துவம் பெறும் ஒரு விடயமாகும். கம்பளை இராச்சியத்தின் அமைச்சருள் ஒருவரான நிசங்க அழகக் கோணார் என்பவர் அந்த அச்சுறுத்தல்களுக்கு அஞ்சாது அவர்களைக் கட்டுப்படுத்தினான். இவன் கம்பளை இராச்சியத்தை ஆரியச் சக்கரவர்த்தியிடம் இருந்து பாதுகாத்தான். மேலும் கோட்டை இராச்சியம் உருவாவதற்கு வழி வகுத்தவனும் இவனே ......''


13ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் கம்பளை வரைக்கும் படையெடுத்துச் செல்லக் கூடிய ஒரு வலிமைமிக்க யாழ்ப்பாண இராச்சியம் இருந்துள்ளது என்பது புரிகிறது. இலங்கையின் வரலாற்றைப் பற்றிக் கூறப் புகுந்த இந்த எட்டு அத்தியாயத்திலும் யாழ்ப்பாண இராச்சியத்தின் வரலாறுபற்றி ஒரு வாக்கியந் தானும் இல்லாது போனது எவ்விதம்?

பக்கம் 113ல் கூறுவதாவது ''ஆறாம் பராக்கிரமபாகு கோட்டை இராச்சியத்தின் மிக முக்கிய மன்னன். இவனே இலங்கையை ஒன்றுபடுத்திய கடைசி அரசன். இவன் சப்புமல் குமாரயா (சண்பகப் பெருமாள்) என்னும் இளவரசனை அனுப்பி வன்னிப் பிரதேசத்தையும் யாழ்ப்பாணப் பகுதியையும் தனது அதிகாரத்தின் கீழ் கொண்டுவந்தான். ''...... 6ம் பராக்கிரமபாகுவின் மரணத்து




(16ஆம் பக்கம் பார்க்க)

# யாழ் நூலக எரிப்பும் இன அழிப்பும்




தென்கிழக்காசியாவிலேயே முதன்மையாக விளங்கிய யாழ். பொதுசன நூலகம் 1981 யூன் 12-ந் திகதி இனவாதிகளால் தீயிட்டுக் கொளுத்தப்பட்டது.

அன்றைய இனவாத அரசின் மூத்த அமைச்சர்களான காமினி திசநாயகாவும் சிறில் மத்தியூவும் நகரில் தங்கியிருந்த நேரமே எரிக்கப்பட்டது.

ஒரு இனத்தின் பண்பாட்டு மற்றும் அறிவுவளர்ச்சிக்கான மையங்களே இன அழிப்பில் ஈடுபடுபவர்களின் கவனத்தை முதலில் கவர்பவை. அந்த வகையிலேயே சிங்கள இனவாதிகளின் கவனம் யாழ். பொதுசன நூலகத்தின் மீது திரும்பியது,

இந்த நூலகம் உலக நூலக அமைப்புடன் நேரடியான தொடர்புகளைக் கொண்டிருந்தது. இதன்மூலமும், பிரிட்டிஷ் கவுன்சில் நூலகத்திலிருந்தும்,



ஆசியா பவுண்டேஷனிலிருந்தும் இன்னும் பல வெளிநாட்டு அமைப்புக்களிடமிருந்தும் ஏராளம் புத்தகங்கள் இதற்குக் கிடைத்து வந்தன.

எரிக்கப்பட்ட நேரத்தில் 70,000க்கு மேற்பட்ட சிறந்த நூல்கள் நூலகத்திலிருந்தன. அப்போது நூலகத்திற்கு ஏற்பட்ட சேதம் 85 லட்சம் ரூபாவாக திரு. லயனல் பெர்ணாண்டோவினால் மதிப்பீடு செய்யப்பட்டது-

தனிநபர்களிடமிருந்தும் பொது ஸ்தாபனங்களிடமிருந்தும் பெறப்பட்ட நூல்களைக் கொண்டு 1982 இல் கட்டடத்தின் வலது பக்கத்தில் மீண்டும் நூலகம் இயங்கத் தொடங்கியது. 1984 இல் இடது பக்கத்தில் திருத்த வேலைகள் ஆரம்பமாயின,

1986க்குப் பின் மீண்டும் நூலகம் செயற்பட முடியவில்லை.

இந்திய இராணுவத்தின் வருகையைத் தொடர்ந்து நூலகம் கடுமையான சேதத்திற்குள்ளானது. 1989 வரை ஏற்பட்ட சேதம் 85 லட்சமாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்திய இராணுவம் வந்தபோது இருந்த நூல்களில் நாற்பது வீதமான நூல்களை மாத்திரமே இந்திய இராணுவத்திடமிருந்து நூலகம் பெற்றுக் கொள்ள முடிந்தது.

வசதியான கட்டம் இல்லாத காரணத்தால் இப்போது இந்த நூலகம் குருநகர்,

(10 ஆம் பக்கம் பார்க்க)

# வளைகுடா யுத்தத்தின் சுற்றுச் சூழல் பயங்கரவாதம்

குவைத் கடற்கரையில் இருந்து 10 மைல் தூரத்திற்கு அப்பால் உள்ள தீவில் உள்ள பிரமாண்டமான எண்ணெய் கொள்கலன் ஒன்று திறந்துவிடப்பட்டது. இது ஒருநாளில் சுமார் 10,000 பீப்பாய்கள் மசகு எண்ணெய் Grude வெளியேற்றுகிறது. இதைவிட குவைத்தில் சுமார் 3 லட்சம் கலன் பெட்ரோலியம் நிரப்பப்பட்ட ஐந்து கொள்கலன்களின் வாயில்கள் திறந்துவிடப்பட்டுள்ளன. இவை நடந்தது 1991 ஜனவரி பிற்பகுதியிலாகும். இது நடந்து மூன்று நாட்களின் பின் திறந்துவிடப்பட்ட எண்ணெய் எரிய ஆரம்பித்தது. இதன் புகை வளைகுடாவின் மேல் எழுந்து ஈரானை அடைந்தது. மேலும் சில நாட்களின் பின் குவைத்தில் உள்ள எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்களும், சேமிக்கும் நிலையங்களும் எண்ணெய் வயல்களும் கூட எரிய ஆரம்பித்தன.



இவற்றை நான்தான் செய்தேன் என்பதை ஈராக்கோ நேச நாடுகளோ இன்னமும் ஒத்துக் கொள்ளவில்லை.

ஆனால், இந்நிகழ்ச்சிகளால் ஈராக்கிற்கு உடனடி தீமைகள் எதுவும் பெரிதாக ஏற்படவில்லை, நேச நாடுகளே சில உடனடி தீமைகளை அனுபவித்தன.

வழிந்தோடும் எண்ணெய் படலம் கடலால் தரையுள் புக முயன்று கொண்டிருக்கும் 'நேச நாட்டு'ப் படைகளுக்குத் தொல்லை கொடுக்கும் என எதிர் பார்க்கப்பட்டது. ஆனால் நேச நாடுகள் தமது தொழில் நுட்ப வளர்ச்சியால் இதை வெற்றிகண்டு விட்டன. அதேபோல் விமானத் தாக்குதலுக்கு புகை மண்டலம் சிக்கல் கொடுக்கும் எனவும் எதிர் பார்க்கப் பட்டிருக்கலாம். ஆனால் 'நேசநாடுகளின்' விமானத்தாக்குதல் இலக்கு ஈராக்காகவே இருக்கப் புகைமண்டலமோ ஈரானை நோக்கியே நகர்ந்துசென்றது.

சவுதி அரேபியாவின் சக்தி உற்பத்திக்கும் பாரிய யந்திரத்தொகுதிகளை குளிரூட்டுவதற்கும் வளைகுடா நீரே பயன்படுத்தப்பட்டது. அதேபோல், சவுதியின் பெற்றோலிய இரசாயனப்பொருள் உற்பத்தி இயந்திரங்களும் கூட கடல் நீரையே பயன்படுத்தின. எண்ணெய் கலந்த கடல்நீர் பயன்படுத்தப் படமுடியாததோர் கலவையாகும்.

உப்பு நீரை நன்னீராக்கும் யந்திரத் தொகுதிகள் எண்ணெய் கலந்த உப்புநீரின் தாக்கத்தால் செயலிழந்து விடக்கூடிய நிலை ஏற்பட்டது. மூன்று பெரும் யந்திரங்கள் பூட்டப்பட்டன. இதனால் பாலைவனப்புயர் துருப்புக்கள் குடிநீர் கஷ்டத்துக்குள்ளானார்கள். குடிப்பதற்காக மட்டுமல்ல இரசாயன தாக்குதலுக்கு முகங்கொடுக்க வேண்டி வரும்போது அதன் தாக்கத்தை தவிர்ப்பதற்கும் நன்னீர் தேவைப்பட்டது. இதனால் அமெரிக்கப்படையினர் பாலைவனக் கிணறுகள் தோண்டினார்கள்.

யுத்தத்துடன் உடனடித் தொடர்பற்ற அடுத்த பிரச்சனை வளைகுடாவின் பூகற்ப அமைவு சீர் குலைந்ததாகும். வளைகுடா ஆழம் குறைந்த-சுமார் 110 அடி மூடிக்கட்டப்பட்ட ஒரு நீர்த்தேக்கமாகும். கடல் அலை குறைந்த இக்குடாவில் கலந்த எண்ணெய் இயற்கை முறையில் அப்புறப்பட சுமார் 200 வருடங்களாவது செல்லும் இதனால் தேங்கி நிற்கும் எண்ணெயால் பறவைகளுக்கு உணவாகும். கடற்பாசிப் படுக்கைகள் அழிந்துவிடும்.

வளைகுடாவின் தெற்குக் கரையோர மணல்களில் படியும் மசகு மணல் பரப்பில் தங்கி

## இயற்கை மாசுபடல்

ஒட்டுத்தன்மையுள்ள தார் உருண்டைகளாகும். மெல்லிய படலம் ஆவியாக ஏனையவை கடல் அடிக்கு எடுத்துச் செல்லப் படும். அங்கு இவைகளால் சுண்ணக் கல் கோறைகள் சேதமடைவதுடன் கடலடிவாழ் ஜீவராசிகளும் அழிக்கப்படும். இதனால் மீன் இனத்தின் வளர்ச்சி பாதிக்கப் படும். பலகோடி வருமானமுள்ள மீன்பிடித்தொழிலும், ஏனைய கடல்சார் தொழில்களும் பாதிக்கப் படும்.

குவைத்தில் உள்ள 363 எண்ணெய்க் கிணறுகளின் சுவாலைகள் ஜீவராசிகளுக்கும் தாவரங் களுக்கும் தீங்கு விளைவிக்கும் பல லட்சம் தொன் சல்பூயிரிக் அமிலத் தையும் நைட்ரிக் அமிலத்தையும் தோற்றுவிக்கும்.

சூரியனின் வெப்பத்தை உள் வாங்கிய பூமி வெப்பக்காற்றை உருவாக்குகின்றது. மேல்நோக்கி நகரும் இவ் வெப்பக்காற்றால் ஏற் படும் குழப்பங்களே காலநிலை யின் இயக்கு சக்திகளாகும். கிளம் பும் எண்ணெய்புகைகள் 3 தொடக் கம் 5 மைல் தூரத்திற்கு கிளம்பு மானால் சூரிய வெப்பம் பூமியின் மேல்வைத்தே உறிஞ்சப்பட்டு விடும். இதனால் வழமையான வளிமண்டலச் சுழற்சி பாதிக்கப் படும். இது வடகோளத்தின் வசந்த காலத்தையும் ஆசிய பருவப் பெயர்ச்சிக் காற்றுகளையும் பாதிக் கும்.

எரிந்து கொண்டிருக்கும் எண்ணெய்ச் சுவாலைகள் அணைக் கப்பட முடியாது போகுமானால் இச்சுவாலைகள் மூன்று தொடக் கம் ஆறுமாதங்களுக்கு எரியக்கூடி யன. 12-25 வாரங்கள் எரிந்தால் சுமார் 15 லட்சம் தொன் புகை சுழற்சியில் இருக்கும். இது வளி மண்டலத்தின் வெப்ப நிலையை 4 ⁰F ஆல் குறைக்கும் இதனால் வசந்த காலத்தில் பனி தோன்றுவ துடன் தாவரங்களும் உறையும்.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தி யத்தின் வரலாற்றில் அன்று ஓர் ஹீரோசிமா... இன்று ஓர் வளை குடா... இடையிடையே பல (Bhopal) போபால்கள்... நாளை எதுவோ?

நாடுகளிடையேயான யுத்தம் பூகோளத்திற்கே எதிரான யுத்த மாக மாறும் நிலை என்றுதான் நீங்குமோ!

## வரலாறு...

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

டன் கோட்டை இராச்சியம் வீழ்ச்சியடைய ஆரம்பித்தது... இளவரசன் சப்புமல் குமா ரயா ஆறாம் புவனேகபாகு என்ற பெயரில் அரசன் ஆனான். .... கண்டி இராச்சியமும் யாழ்ப்பாண இராச்சியமும் மீண்டும் சுதந்தி ரம் எய்தின''. ...அத்தியாயம் 17ன் முடிவில் யாழ்ப்பாணராச்சியம் என்ற தலைப்பில் ஒரு நாலுவசனம் அதைப்பற்றி பேசப்பட்டுள்ளது.

தென்னிந்தியப் படை எடுப்பாலும் மலேரியா நோயினாலும் அநுராதபுர ராச தானி, பொலநறுவவுக்கு இடம்பெயர்ந்து, பின் தம்பதெனியா நோக்கி நகர்ந்து பின் குருணாகலையை அடைந்து அங்கிருந்து கம்பளைக்கு இடம்மாறிய சிங்கள ராசதானி களைப் பற்றிக் குறிப்பிடும் இந்த எட்டு அத்தியாயங்களும் இதே அண்சமவெளியில் தளைத்து வளர்ந்து நிலைத்துநின்ற வன்னி ராச்சியங்களைப் பற்றி மறந்துபோனது ஏன்?

அநுராதபுரத்தில் இருந்து கோட்டை வரையான வரலாறுதான் இலங்கை வர லாறா? சிங்கள வரலாறுதான் இலங்கை வரலாறாகக் கருதப்படுகின்றதா? சிங்களவர் களின் வரலாறு கூட முழுமையாக இல்லை என்பது கணக்கில் கொள்ளப்பட வேண்டும். கண்டிராச்சியமும் யாழ்ப்பாண இராச்சியத் தைப்போன்று இருட்டடிப்புச் செய்யப்பட் டுள்ளது. இலங்கைத் தீவின் கிழக்குப் பகுதி யின் நிலைபற்றி ஒரு சொல்தானும் இல்லை.

இது மாதிரியான இருட்டடிப்புகளும் திரிபுகளும் இவை மாத்திரமல்ல இன்னும் ஏராளம்.

## அலைகள்..

(14ஆம் பக்கத் தொடர்ச்சி)

''ஒகே ... தாங்யூ ... மிஸ் டர் மூர்த்தி. அது சரி, உங்கட கசின் மிஸ்டர் சூரசங்காரம் என் னுடைய மிஸிஸ் குடும்பத்துடன் நல்ல அறிமுகமாமே?'' என மூர்த் தியின் வயிற்றெரிச்சலைக் கிளப்பி பினார்.

அக் கேள்விக்கு பதிலாய் ஏதோ ஒரு பக்கத்துக்கு தலை யாட்டிய மூர்த்தி, ''தாங்யூ'' என்று எல்லோர்க்கும் பொதுவாக கூறி விட்டு வெளியேறினார்.

நேர்முக பரீட்சை முடிவ டைந்தது. சம்பந்தப்பட்ட பத்தி ரங்களையும் கோவைகளையும் ஒழுங்கு படுத்திய பின் நியமனம் சம்பந்தமாக பேசி முடிவெடுப்ப தற்காக பதிவாளரும், பேராசிரி யரும் உப-வேந்தரை நோக்கிய போது அவர் அந்த பத்திரிகை செய்திகளிலே மூழ்கி இருந்தார்.

நன்றி ''நான்''
மலர் 16 . இதழ் - 1

# சதாம் ஹுசேன்— ஓர் அரேபிய ஒளிநட்சத்திரம்?

இவர் 1937ல் வட ஈராக்கில் ரிக்றிட் என்ற பட்டணத்திற்கு அண்மையில் உள்ள விவசாயக் கிராமம் ஒன்றில் கல்வியறிவில்லாத ஒரு வறிய விவசாயக் குடும்பத்தில் பிறந்தார். சிறுவயதிலேயே தனது தந்தையை இழந்தார். இவரின் வளர்ப்புத் தந்தை ஒரு கொடியவர். 1950களின் நடுவில் இடைநிலை மாணவனாக இருந்த காலத்திலேயே அரேபிய தேசிய வாதத்துடன் தொடர்பு கொண்டார். தனது 20வது வயதில் மத சார்பற்றதும் சோஷலிச கருத்துக்களைக் கொண்டதுமான பாத் கட்சியில் (Baath Party) இணைந்து கொண்டார். தனது 22வது வயதில் இராணுவ சதியின் மூலம் அரசைக் கைப்பற்றிய அப்துல் கறீம் காசி என்பவரைக் கொலை செய்யும் முயற்சியில் ஈடுபட்டார். இம் முயற்சியின் போது இவரின் காலில் குண்டு பாய்ந்தது. அதைத் தானே கத்தியால் கீறி எடுத்து கழுதையில் ஏறிப் பாலைவனத்தைத் தாண்டித் தப்பிச் சென்றார். இவர் மிகுந்த கொள்கைப் பற்றுமிக்கவராக விளங்கினார். 1958ல் இவர் தனது மைத்துனரைத் தானே கொலைசெய்தார். அம் மைத்துனர் இராணுவ சர்வாதிகாரி காசிமின் ஆதரவாளராக இருந்ததே இதற்கான காரணமாகும்.

தப்பி ஓடிச் சென்று எகிப்தின் தலைநகரான கெய்ரோவில் அடைக்கலம் புகுந்த சதாம் ஹுசேன் 1963ல் நாடுதிரும்பி பாத் கட்சியில் உயர்ந்த இடத்தை வகித்தார். கொள்கை பரப்பு வேலையில் ஈடுபட்ட அதே வேளையில் இரகசிய பொலிஸ் ஸ்தாபகராகவும் இருந்தார். 1968ல் பாத் கட்சி அதிகாரத்துக்கு வந்தது. அஹமட் ஹுசேன் அல்பக்காரைத் தலைவராகக் கொண்ட புரட்சிகர ஆணைச் சபையே நாட்டை ஆட்சி செய்தது. சதாம் ஹுசேன் இக்கட்சியின் துணைத்தலைவராக இருந்தார். 1979ல் பக்கர் தலைமைப் பதவியை சதாமிடம் கையளித்தார். அப்போது சதாமின் வயது 47 ஆகும். அன்று முதல் இன்றுவரை சதாம் ஹுசேன் தான் ஈராக்கின் குடியரசுத் தலைவராக இருந்து வருகிறார்.

சதாம் ஹுசேன் சோவியத் ஒன்றியத்தின் தலைவர் யோசப் ஸ்ராலினின் பேரன் என்றோர் கதையும் உண்டு. ஜேர்மனியர்களால் சிறைப் பிடிக்கப்பட்ட ஸ்ராலினின் மகன் ஜக்கோப் சிறையில் இருந்து தப்பி மத்திய கிழக்குப் பகுதிக்கு வந்து அங்கு தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்தார், சதாம் பிறந்த கிராமத்தில் தங்கியிருந்த போது அவருக்கு பிறந்த குழந்தையே சதாம் ஹுசேன் என்று கூறப்படுகிறது. ஆனால் இது உண்மையாய் இருக்க முடியாது. சதாம் பிறந்தது 1937ல். ஆனால் 2ம் உலக யுத்தம் ஆரம்பித்தது 1939லாகும்.

சதாம் தனது ஆரம்ப நாள் முதல் ஈடுபாடு கொண்டிருந்த அரேபிய தேசியவாதத்தைத் திறம்பட வளர்த்து வந்தார். இவரின் ஆட்சிக் காலத்தில் ஈராக் ஆச்சரியப் படும் அளவிற்கு நவீனமயமாகி இருந்தது. ஏனைய அரேபிய நாடுகளுடன் ஒப்பிடும்போது இது மிகவும் உயர்ந்ததாய் இருந்தது. வறுமையும் மிகக் குறைவாகும். எழுதப் படிக்கத்தெரியாதோர் வீதமும் மிகக் குறைவாகும். ஏனைய இஸ்லாமிய நாடுகளைப் போலல்லாது இங்கு பெண்கள் சம வேலைக்குச் சமஊதியம் பெறுவது உத்தரவாதப் படுத்தப்பட்டிருந்தது. சம்பளத்துடனான பிரசவ கால விடுமுறையும் இருந்தது. இவை மாத்திரமல்ல, வரையறுக்கப்பட்ட மத சுதந்திரமும் அங்கு நிலவியது.


இன்று அரேபிய உலகில் அங்கொன்றும் இங்கொன்றுமாக இஸ்லாமிய மாறாமரபியல் வாதம் (Fundamentalism) தலைதூக்கிய வண்ணம் உள்ளது. இஸ்ரவேலும் அமெரிக்காவும் இதை ஊக்குவித்தும் வருகின்றன. பாலஸ்தீனத்தில் யசிர் அரபாத்திற்கு எதிரான ஒரு இஸ்லாமிய மாறா மரபியல்வாத



இயக்கத்தை இஸ்ரவேலே வளர்த்து வருகிறது. அல்ஜீரியாவில் சமீபத்தில் நடந்த தேர்தலில் இஸ்லாமிய இரட்சணிய முன்னணி என்னும் இயக்கமே பிரதான எதிர்க்கட்சியாக வெற்றிபெற்றுள்ளது அல்ஜீரியாவில் ஆட்சியில் இருக்கும் தேசிய விடுதலை முன்னணியை ஆட்சிக் கவிழ்ப்புச் செய்வதே இதன் நோக்கமாய் உள்ளது. ருனிசியாவில் சதிவேலைகளிலும் கொலை முயற்சிகளிலும் ஈடுபட்டார்கள் என்பதற்காக 102 இஸ்லாமிய மாறாமரபியல் வாதிகள் ருனிசிய அரசாங்கத்தால் தண்டிக்கப் பட்டார்கள். ஈரானிய புரட்சிக்குக் காரணமாக இருந்த பல்லாயிரக்கணக்கான முற்போக்கு சக்திகள் அப்துல்லா கொய்மெனியின் ஆட்களால் சிறைப்பிடிக்கப் பட்டார்கள். ஈரானே இன்று இஸ்லாமிய மாற மாபியல்வாதத்தின் நடுநாயகமாகத் திகழ்கிறது.

சதாம் ஹுசேன் இஸ்லாமிய மாறா மரபியல் வாதத்திற்கு எதிரான ஒரு உரமிக்க தலைவராய் இருப்பதனால் அரேபிய மக்களிடையேயும், அரேபிய நாடுகளிடையேயும் அவருக்கு மதிப்பு உண்டு. வளைகுடா ஈரானிய இஸ்லாமிய மாறாமரபியல்வாதிகளால் ஆதிக்கம் செய்யப்படுதலை அரேபிய நாடுகள் விரும்பவில்லை.

அடுத்த சூழ்நிலை, மத்தியதரைக் கடலுக்கும் அரேபியக்கடலுக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் எந்த ஒரு நாடும் தனிச்சக்தியாக வளரக்கூடாது என்பதே அமெரிக்கா உட்பட்ட மேற்குலக நாடுகளின் முதலாம் உலக யுத்தத்தின் பின்பான கொள்கையாக இருந்து வருகின்றது. இப்பிரதேசம் உலகின் இயல்பான எண்ணெய் சேகரிப்பில் 2௦%த்தைக் கொண்டிருப்பதும் பண்டைய எகிப்திய, மொசப்பரேமிய (இன்றைய ஈராக்), பேர்சிய (இன்றைய ஈரான்) நாடுகள் இங்கு இருப்பதுவுமே இதற்கான காரணமாகும். இதனால் மேற்குலகம் இருபெரும் எண்ணைவள நாடுகளான ஈராக் - ஈரான் ஆகிய வற்றிற்கிடையில் ஒரு இராணுவ சமநிலையைப் பேணி வந்தது. 1980ல் சதாம் ஹுசேன் இந்த இராணுவ சமநிலையை குலைக்கும் நோக்குடன் ஈரானைத் தாக்கினார்.




அதில் வெற்றியும் பெற்றார். மேற்குலகின் கட்டுப்பாட்டில் இல்லாத ஒரு தனி இராணுவ சக்தியாக ஈராக்கை மாற்றியமைத்தார். 1980ல் இருந்து வளைகுடாயுத்தம் ஆரம்பிக்கும் வரை சதாமின் இராணுவமே அரேபிய உலகின் சக்தி மிக்க இராணுவமாக இருந்தது.


வளைகுடா யுத்தத்தைத் தவிர்த்துப் பார்த்தால் கடந்த 42 வருடங்களில் அரேபிய உலகம் ஆறு பாரிய யுத்தங்களைக் கண்டுள்ளது. இவற்றில் பல இஸ்ரேலினால் வெல்லப்பட்ட யுத்தங்களேயாகும். பண்டைய மத பாரம்பரியத்தில் இருந்தே தமது தாய்ப் பூமியின் பூகோள எல்லைகளை வகுத்துக் கொண்ட இஸ்ரேலுக்கு எதிராகப் பண்டைய மொசப்பரேமியா வளர்க்கப்படவேண்டும் என்பதே சதாமின் அபிலாசையாய் இருந்தது. அவரின் வார்த்தையிலேயே சொல்வதனால் – ஈராக் "ஒன்றில் வழிகாட்டும் நட்சத்திரமாக இருக்க வேண்டும். இல்லையேல் "ஆக்கிரமிப்பு இராணுவத்தின் கீழ் நசுக்கப்படும் தேசமாய் இருக்க வேண்டும்." மகிமை அல்லது தோல்வி இதுதான் அவரின் தாரகமந்திரமாக இருந்தது. இவர் அரேபியர்களின் அபிலாசைகளின் பிரதிபலிப்பாகத் திகழ்ந்தார்.

1990ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் குவைத் ஆக்கிரமிக்கப்படும்வரை இவர் தலைசிறந்ததொரு இராஜதந்திரியாகவும் திகழ்ந்தார். மூன்றாம் உலக நாடுகளுடனும், மேற்குலக நாடுகளுடனும், சேஷலிஸ

(19ஆம் பக்கம்பார்க்க)

# கயிற்றுப் பாலம்

மகாவலி கங்கை சில இடங்களில் அகன்றும் சில இடங்களில் ஒடுங்கியும் ஓடிக்கொண்டிருந்தது. மகாவலி பாயும் பிரதான பாதையில் பெரும் பாலங்கள்,



குட்டிக்கதை

தொங்குபாலங்கள், போன்றவை உள்ளன. இவை தவிர கயிற்றின் உதவியினால் ஆறுகளை கடக்கும் முறைகளும் உண்டு. இவை ஆடு பாலங்கள், கயிற்றுப் பாலங்கள் எனப்படும். இவை மக்களால் கட்டப்பட்டவை. பழக்கப்பட்ட கிராம மக்களைத் தவிர ஏனையோர்கள் இதன்மேல் பயணம் செய்ய அஞ்சுவார்கள். இவ்விதமான பாலங்களை அமைப்பதன் மூலம் கிராம மக்கள் ஆற்றைக் கடக்கப் பல குறுக்குப் பாதைகளை ஆக்கி இருந்தார்கள்.

ஒருநாள் மகாவலியில் குறுக்கே பாலங்கட்டும் நோக்குடன் சில பொறியியலாளர்கள் தமது உதவியாளர்களுடனும்கருவிகளுடனும் கங்கைக் கரையோரம் வந்தார்கள். பாலம் கட்ட பொருத்தமான இடத்தை தேடும் முயற்சியில் ஈடுபட்டார்கள். அந்த தேடுதலின்போது அவர்கள் அந்த ஆடு பாலத்தைக் கண்ணுற்றார்கள். திடுக்குற்றார்கள். பிரதான பொறியியலாளன் இது எந்த முட்டாளின் கண்டு பிடிப்பு என கேலிசெய்ய ஆரம்பித்தான். பொறியியலாளர்களிடையே விவாதம்ஆரம்பித்தது. ஆற்றங்கரையில் அமர்ந்தார்கள், பேனாவும் ஒற்றையுமாக சூடான விவாதத்தில் ஆழ்ந்துவிட்டார்கள். பல்வேறு விதமான கணிப்பீடுகள். இறுதியாக அவர்கள் வந்த முடிவு மனிதர்கள் தனித்தோ தலையில் சுமையுடனோ இப்பாலத்தைச் கடக்க முடியாது என்பதேயாகும். தாம் அக்கரைக்கு போவதனால் ஐந்து மைல் சுற்றிவந்துதான் அந்த ஆற்றைக் கடக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தார்கள். பெரிய ஒரு கண்டுபிடிப்பைச் செய்த களைப்பும், பெருமையும் கொண்டு அப்பாடா என்று பெருமூச்செறிந்தார்கள். களைப்புத்தீர குளிர்பானம் பருகவேண்டும் போல் இருந்தது. உதவியாளனை அழைத்தார்கள் ''போய் கூல் டிறிங்ஸ் றெடி பண்ணு'' அவர்களின் குரலுக்கு பதில் குரல்கள் இல்லை. உரத்துக் கூப்பிட்டார்கள்.

''இதோ வந்திட்டன் சேர்'' எங்கோ தூரத்தில் இருந்து பதில் வந்தது.

பதில் வந்த திசையை திரும்பிப் பார்த்தார்கள். உதவியாளன் ஆற்றின் அக்கரையில் இருந்து கயிற்றுப் பாலத்தால் வேகமாக வந்து கொண்டிருந்தான். இதைக் கண்ணுற்ற பொறியியலாளர்கள் அசடுவழிய ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

''படித்த மேதாவிகளால் கயிற்றுப் பாலத்தால் போகமுடியாது'' என்ற ஒரு அந்நிய பழமொழியை ஒட்டிய கதை.

''ஏட்டுச் சுரக்காய் கறிக்குதவாது'' என்பதும் இதுவே.

## சதாம் ஹுசேன்....

(18ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாடுகளுடனும் மிகச் சிறந்த நட்புறவைப் பேணிவந்தார். அடிபட்ட ஈரான் கூட இவருடன் நேரடியாகப் பகைத்துக் கொள்ளவில்லை.

அரேபியாவின் மொத்த எண்ணை உற்பத்தியில் சுமார் 30%த்தை வளங்கிய ஈராக், சதாமின் தலைமையில் ஒரு செல்வம் கொழிக்கும் நாடாக விளங்கியது. எவரின் துணையும் இன்றி அணு ஆயுதம் உற்பத்தி செய்யும் திறனைப் பெறுமளவிற்கு ஈராக் வளர்ந்திருந்தது. அதற்குத் தேவையான யுரேனியத்தை அது போதியளவு கொள்வனவு செய்தது. அவசியமான தொழில் நுட்பங்களைக் கூட அது பெற்றுவிட்டது என்பதே பென்டாகனின் (அமெரிக்க இராணுவ ஆய்வு தலைமையகம்) மதிப்பீடாக இருந்தது. [illegible]யும் சில மாதங்களில் ஈராக் அணுகுண்டைத் தயாரித்து விடும் என பென்ண்டாகன் அமெரிக்காவை 1୨90 நடுப்பகுதியில் எச்சரித்திருந்தது.

தனது இவ்வித உறுதிக்கும், ஆற்றலுக்குமாக அரேபிய மக்களால் மதிக்கப்பட்ட சதாம், குவைத்தை ஆக்கிரமித்ததன் மூலம் பலரின் வெறுப்புக் குள்ளானார். அரேபிய உலகம் அவரைக் கண்டு பயப்படும் நிலையை உருவாக்கினார். இத் தவறு அரேபிய உலகுக்குப் பல இழப்புக்களையும் பல தோல்விகளையும் படிப்பினையாக வளங்கிவிட்டது.

பண்டைய மொசப்பரேமியாவை மீளவும் உருவாக்கி ஒளி மிக்க ஒரு ஈராக்கை தோற்றுவிக்க சபதம் பூண்டுவிட்ட சதாமால் குருடிஷ் மக்களின் தன்னாட்சி உரிமையை மதிக்கமுடியாது போனது ஒரு வரலாற்றுச் சோகமேயாகும்.

இவ்விரு தவறுகளையும் அவர் திருத்திக் கொள்வாரேயானால் அரேபிய உலகின் ஒளிநட்சத்திரமாக அவர் மீண்டும் மிளிருவது சாத்தியமாகலாம்.




விவேக்

அன்புள்ள மாணவ இளைஞனே. ஒரு தென்றலைப் போல வழிமறிக்கின்றேன். இந்த நிலா முற்றத்திலமர்ந்து உன்னோடு சில நிமிடங்கள் பேசவேண்டும்.

உன் கரங்களைப்பிடித்திழுத்து வந்து பலாத்காரமாக ஒரு கதிரையில் இருத்தி 'திணிப்பாக, எதனையும் நான் சொல்ல வரவில்லை.

ஒரு தோழனாக - தோள் தொட்டு உன்னைத் தொடரவே விரும்புகிறேன்.

ஓர் அமைதி மாலையில், ஆற்றங்கரைமீதமர்ந்து கதைகள் பேசுவதுபோல —

ஓர் பச்சை வயல் வெளியில் விழிகளைக் குளிப் பாட்டி அந்த வரம்புகள் மீது நடந்து கொண்டே கதைப்பது போல நாம் பேசிக்கொள்ளலாம்.

இதற்காகவே இந்த நிலா முற்றம் நமக்கென ஒதுக்கப்பட்டுள்ளது.

அரசியல், வரலாறு, பொருளாதாரம் மட்டுமல்ல தினசரி வாழ்வின் அனுபவங்கள். படித்து, பார்த்து, கேட்டு வைத்த விடயங்கள் எல்லாமே இங்கு இலக்கியப் பதிவாகப்பரிமாறப்படும்.

அந்தவகையில் இன்று —

'கவிதை, என்பதன் பொருள் பற்றியும், 'கவிதை' என்பதை வித்தியாசமாகப்பார்த்த ஒரு கவிஞனைப் பற்றியும் கொஞ்சம் கதைப்போம்.

'கவிதை. என்பதன் பொருள் என்ன? நான்கு சுவர்களுக்குள் அடைபட்டுக்கிடந்து கற்பனையை மட்டும் பறக்கவிட்டு காகிதங்களை நிரப்புவதுதான் கவிதையா?..

இல்லை. அதுமட்டும்தான் கவிதை என்பதில்லை.

உலகில் நன்மைக்கென நிகழும் ஒவ்வெரு நிகழ்வும், ஒவ்வொரு பொருளும், ஒவ்வொரு அசைவும் கவிதைகள் தான்.

அன்பான ஓர் பார்வை. ஆறுதலான ஓர் வார்த்தை இனிமையான ஓர் புன்னகை இவைகளெல்லாம் சிறந்த கவிதைகள் தான்!

ஏன்...... மௌனம் கூட இனியதோர் கவிதையே! இவை எழுதப்படாத இயற்கைக்கவிதைகள்

எல்லாக் கவிதைகளும் எழுதி முடிவதில்லை.

மக்களைக்காக்க களத்தில் நின்று எதிரியுடன் போர் புரியும் இயல்பும் மிகப்பெரிய கவிதையே.

இவ்வாறான துணிச்சல் மிக்க, வீரம்மிக்க ஆபத்தான காரியங்களில் ஈடுபடும் தன்மையினை செயற் கவிதை, என பெயரிட்டு அழைத்தவர் பிரெஞ்சு நாட்டுக் கவிஞர் ப்ளெய்ஸ் செண்ட்ரார்ஸ் (BLAISE SENDRARS)

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பம். பிரான்ஸில் கலை. இலக்கியத்துறையில் புதிய புரட்சி அலைகள் தோன்றியகாலம். அக்காலகட்டத்தில் இலக்கியத்துறையில் ஒரு நவீன இயக்கத்தினை தோற்றுவித்தவர்களுள் இந்தக்கவிஞரும் ஒருவர்.

எழுத்துக் கவிஞனாக மட்டுமின்றி செயற்கவிஞனாகவும் வாழ்ந்த இவரைப்பற்றி தெரிந்து வைத்திருத்தல் தேவைக்குரியதாகும்.

பதினைந்தாவது வயதில் பெற்றோரின் பிடியிலிருந்து தப்பி தனது வீட்டின் ஐந்தாவது மாடியிலிருந்து குதித்தோடிய தீவிர விடுதலை விரும்பி இவர்.

இவரின் கவிதைகளும் இத்தன்மையானதாகவே காணப்படுவதாக ஒரு நூல் சொல்கிறது.

முதலாவது உலகப் போரின் போது வலக்கையை இழந்தபின்பும் எவ்வித கவலையுமின்றி உற்சாகமாக தனது வாகனத்தில் ஓடித்திரிந்தார்.

"ஆபத்துக்களை ரசிப்பவன் நான். அகண்ட பிரபஞ்சத்தின் அழைப்பை என்னால் மறுக்கவே முடிந்ததில்லை" என்று கூறியவர் இவர்.

கவிதை என்பதற்கு புதிய அர்த்தத்தினைக் கூறிய ப்ளெய்ஸ் செண்ட்ரார்ஸ் ஒரு கவிஞன் மட்டுமல்ல. ஒரு சிறந்த கவிதையுமாவார்.

இவரின் அர்த்தப்படி பார்ப்போமானால் நமது மண்ணில் எத்தனை செயற் கவிஞர்கள் தோன்றுகிறார்கள்...!
நாளாந்தம் எத்தனை செயற்கவிதைகள் படைக்கப்படுகின்றன...!

எண்ணிப்பார்க்கவே இதயம் நிறைவு கொள்கிறது. இந்த மண் முழுவதும் கவிதைக் குவியல்களே!

நாமும் கவிதைகள் வரைவோம் கவிதைகளாகவே வாழ்வோம்.

(இன்னொரு முற்றத்தில் தொடரும்)

# அலைகள் ஓய்ந்தபின்

சிறுகதை

அமைதியான இரவில் விநாயக மூர்த்தி தனது படிப்பறையில் உட்கார்ந்து யோசித்துக்கொண்டிருந்தார். கையில் வெளிநாட்டு சிகறற் புகைந்துகொண்டிருந்தது. மேசையில் பாதி அருந்திய தேனீரும் சில விண்ணப்ப படிவங்களும், மூளை பலவித குறுக்கு வழிகளை ஆராய்ந்து கொண்டிருந்தது. நேரம் பத்து மணிக்கு மேல். மனைவி பிள்ளைகள் உறங்கி விட்டனர், நாளைக்கு எப்படியாவது விடயத்திற்கு ஒரு முடிவு கண்டாக வேண்டும் என்ற தீவிர நோக்கில் அவர் இருந்தார்.

குண்டு வெடிப்புக்களும் செல்லடிகளும் துப்பாக்கி சூடுகளும் மரண ஓலங்களுமாக யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் இதைச் சாட்டாக வைத்து பணம் சேர்க்க வெளிநாடு போனவர்களில் மூர்த்தியும் ஒருவர். அவர் தான் பணியாற்றிய பல்கலைக் கழகத்தின் பௌதிகப் பிரிவுத் தலைவராயிருந்தவர். ஒரு மேலைநாடு வழங்கிய புலமைப் பரிசிலின் பெயரில் வெளிநாடு சென்றவர், அது ஒரு வருடத்தால் முடிவடைந்த போதும நாட்டு நிலமை சரியில்லையென்று காரணம் காட்டி அங்கே உழைத்து நான்கு தலைமுறைக்கு வேண்டியதைச் சேர்த்து விட்டார். அவருக்கு மூன்று பிள்ளைகள். இரு ஆண்கள் ஒரு பெண்.

இப்போது நாடு வழமைக்கு திரும்பிவிட்டதால், பழைய உத்தியோகத்தை நாடி வந்திருக்கிறார். அங்கு உழைத்ததை இங்கு கொண்டு வந்து பகட்டாக வாழ வேண்டும்!

பழைய உத்தியோகத்திற்கு விண்ணப்பித்தார். இவரைப்போல் நாடு திரும்பியவர்கள் ஏற்கனவே இங்கிருந்தவர்கள் எனப் பலர் போட்டியிட்டனர். தகுதிகளைப் பொறுத்தமட்டில் எல்லா விண்ணப்பதாரிகளும் ஏறக்குறைய சமமாய் இருந்தனர். ஆனால் மூர்த்தி தனக்குத் தானே இரண்டு சாதக புள்ளிகளை (டினஸ் பொயின்ற்) போட்டுக் கொண்டார். ஒன்று; முன்பு அப்பிரிவுத் தலைவராக இருந்தமை, இரண்டு; புலமைப் பரிசில் பெற்றமை. தன்னோடு போட்டியிடும் மற்றப் பதினொரு பேரையும் எப்படித் தோற்கடிப்பது என்பதே மூர்த்தியின் இப்போதைய சிந்தனை. அறிவியற் துறைத்தலைவராகவுள்ள பேராசிரியர் அருமை நாயகம் நேர்மையான மனிதர். எனவே குறுக்குவழிகளுக்கு அவரை நாடமுடியாது என மூர்த்தி உணர்ந்தார். இவர் பணியாற்றிய போது இருந்த அதே உப வேந்தர் தான் இன்னும் இருக்கின்றார். அவரைச் சந்தித்தார்.

## ஜெயமேரி

எப்படியிருந்தாலும் பிறந்த நாட்டுக்குச் செய்யும் சேவையைப் போல மனத்திருப்தி இருக்காது என்று சொல்லிச் சாங்கோ பாங்கமாக விடயத்தை தொடங்கினார்.

சுக க்ஷேமங்கள் பற்றிய விசாரணை, மூர்த்தியின் வெளிநாடு பற்றிய அளப்பு, எல்லாம் முடிய நாடு சீரடைந்து விட்டபடியால் பல்கலைக் கழகத்தை மீண்டும் கட்டியெழுப்புவது பற்றி உபவேந்தர் பேசத் தொடங்கினார். சந்தர்ப்பத்தை நழுவ விடாது மூர்த்தி தனது விண்ணப்பம் பற்றி எடுத்துக்கூறினார்.

''பன்னிரெண்டு அப்பிளிக்கேசன் கிடைச்சிருக்காம். உங்கடையும் வந்திருக்கெண்டு சொன்னவர்'' என்று சொன்னார். உப வேந்தர்.

அதுதான் நானும் வந்தனான் என்று இழுத்தார் மூர்த்தி. ''தேர்வுக் குழுவில் நானும் இருப்பன். மற்றது பதிவாளரும், விரிவுரையாளரும் தான். அவருடைய ''பீடம்'' என்டபடியால் நான் அதிகமாக ஒண்டுஞ் செய்ய ஏலாதெண்டு நினைக்கிறன்'' இது உபவேந்தர், ''நீங்கள் பழையபடி வாறது எனக்கு விருப்பம் தான், ஆனால் இது என்ர செல்வாக்குக்கு அப்பாற்பட்டது'' என்று முடித்தார் அவர். ''பாப்பம்... அப்ப வரட்டே? என்று சொல்லிப் புறப்பட்டார் மூர்த்தி அந்நேரமிருந்தே தன் மூளையை போட்டு கசக்கி கொண்டிருந்தார்,

விரிவுரையாளர் அருமைநாயகத்தின் மனைவியின் தந்தைக்கும் மூர்த்தியின் மைத்துனர் முறையான ஒருவருக்குமிடையில் நட்பு இருந்த விடயம் தற்போது அவருக்கு நினைவுக்கு வந்தது. அன்று மாலையே அவர் மைத்துனர் சூர சங்காரத்தை சந்தித்தார், அவரிடம் விடயத்தை கூறினார்.

''அட இது ஒரு சின்னப் பிரச்சனை. உனக்கு பழைய உத்தியோகம் கிடைச்சிட்டுதெண்டு நினைச்சுக்கொள். திருமதி அருமையின்ரை குடும்பம் எனக்கு பலநாள் சிநேகம். அவையை எனக்குத் தெரியும்''

அன்று சாயந்தரமே இருவருமாக திருமதி அருமையின் தந்தை வீட்டுக்கு புறப்பட்டனர். மூர்த்தியின் அதிர்ஷ்டம் அருமைநாயகத்தின் மனைவி ஏதோ அலுவலாக அங்கு வந்திருந்தாள்.

''சங்கரண்ணை வாருங்கோ'' என்று திருமதி அருமை வரவேற்ற போதே அவரது மைத்துனர் கொடுத்த வாக்குறுதி பாதி நிறைவேறியதாக மூர்த்தி எண்ணிக் கொண்டார். விடயம் திருமதி அருமைக்கு கூறப்பட்டது,

''சங்கரண்ணை உங்களுக்குச் செய்யாத உதவியே? ஆனால் இந்த விசயத்தில் நான் என்ன செய்யலாமெண்டு எனக்கு விளங் கேல்ல. ஏனெண்டா இப்படியான ஒரு அலுவலை இதுக்கு முந்தி நான் அவரோட கதைக்கயில்ல எண்டாலும் அவரிட்ட சொல்லு கிறன்''

''பிள்ளை சும்மா சொல்லுற தோட நிக்கப்படாது. விஷ யத்தை முற்றாக்கிப் போட வேணும். அவையள் கேக்கும் தகுதியெல்லாம் இவருக்கிருக்கு எண்டாலும் இந்த நாளையில தகுதியவிட சிபார்சுதான் முக்கி யம்!''

''என்னாலை ஆனதைச் செய் வேன் தானே அண்ணை''

''உம்மை நம்பித்தான் போறம்'' என்று சூரசங்காரமும்

''சரி வாறம்'' என மூர்த்தி யும் கூறிக்கொண்டு விடை பெற் னர்.

மூர்த்தி திருமதி அருமையை நோக்கி ஒரு மரியாதைச் சிரிப்பை யும் அட்வான்சாக சிந்திவிட்டுப் படியிறங்கினான்.

நேர் முகப் பரீட்சைக்கான நாள் வந்தது. ஒரு நட்புறவுச் சூழலில் இது ஆரம்பமானது மூர்த்தியின் புலமைப் பரிசில் பற்றி பேராசிரியர் விளக்கினார். ''செவ் வாய் கிரகப் பயணமும் பௌதீக வியலும்'' என்பது பற்றியதாக இருந்தது.

''இதை நீங்கள் தெரிவு செய்த னீங்களோ அல்லது அவை தந்த வையோ?''

''நான்தான் தெரிவு செய்த னான்'' பெருமை பொங்க மூர்த்தி பதிலளித்தான்.''

''வேறு என்ன தலைப்புக்கள் இருந்தன?''

''மன்னிக்கவும் எனக்கு எல் லாம் ஞாபகமில்லை. ஆனால் எ லாம் செவ்வாய்க்கான பயணம் பற்றியது''

''சரி இதனால் எமது மாண வருக்கு ஏதும் பிரயோசனமிருக் குமா?''

''என்ன இருக்காது? செவ்வாய் பற்றி நம்மடை மாணவரும் படிக் கத்தானே வேண்டும்''

''அது ஒரு ஆரம்ப அறிவிருந் தால் போதும். எங்களுக்கு இப்ப தேவை என்னவெண்டால் பௌதீ கம் எப்படி எமது அபிவிருத்திக்கு பயன் படும் என்பதுதான். எமது தேவையை மையமாக வைத்துக் கொண்டு நாங்கள் பாடங்களை தயாரிக்கவேண்டும். வெளிநாட் டின் தேவைக்காக அல்ல''

''அப்படியெண்டால் செவ் வாய் சம்பந்தப்பட்ட தலைப்புக் கள் ஏன் தந்தவைகள்!''

அதிலதான் விஷய மிருக்கு நீங்கள் அந்தத்துறையில் ஆர்வம் காட்டி ''ஏ,' தராதரம் கிடைச்சி ருந்தா உங்களுக்கு அங்கே ஒரு வேலையை தருவாங்கள். உங் கடை வகுப்பில் பாகிஸ்தான் ஆளை அப்படிப் பிடிச்சிற்றாங் கள் எண்டு கேள்வி. அப்படியில் லாமல் நீங்கள்சொந்தநாட்டுக்குத் திரும்பினால் செவ்வாய்ப்பிரயா ணம் பற்றிக் கதைப்பீங்கள். அது அவங்களுக்கு இலாபம்.

''லாபமா என்ன லாபமா?'' மூண்டாம் நாடுகளைச் சுரண்டி அதில வருகிற இலாபத்தைக் கொண்டுதான் மேற்கு நாடுகள் தமது அபிவிருத்தி விண்வெளிப் பிரயாணம் எண்டெல்லாம் செய் யினம். இது பற்றி வறியநாடுகள் கண்டிக்கத்தொடங்கவே அவர்க ளின் வாயை மூட ஒரு வழி தேவைப்பட்டது.

நங்கள் அப்படியானதொரு புலமைப்பரிசில் பெற்றிருந்தால் அதைப்பற்றி உங்கட நாட்டில கதைப்பீர்கள். உங்களபோல படித்தவர்கள் பேசுவது பேப்பரில வரும் அதைப் ப[illegible]வங்கள் தங்கட வறுமையைவிட செவ்வாய் பிரயாணம் முக்கியமானது என ஏமாந்து கண்டிக்கிறத விட்டு விடி வினம். முக்கியமான இந்த விட யம் பற்றி தனக்கு இதுவரை புரி யாமல் போனதுபற்றி உபவேந் தர் அசடு வழிந்து கொண்டிருந் தார். பதிவாளர் பத்திரங்களை சரிபார்ப்பதில் அக்கறையாக இருந் தார். நிறுத்தி மூச்சுவிட பேராசிரி யர் தமது பைக்குள் இருந்து ஒரு பத்திரிகைச் செய்தியை எடுத்து இதையும் ஒருக்கா பாருங்கோ மிஸ்டர் மூர்த்தி என அதனைக் கொடுத்தார்.

'வெளிநாட்டுப் புலமைப்பரி சில்களும் அவற்றின் பின்னணியும்' என்ற தலைப்பிலான கட்டுரை அது. சில வரிகள் கோடிடப்பட் டிருந்தன. ஏற்கனவே பேராசிரியர் கூறியவற்றால் அதிருப்தி அடைந்து நேர்முகப்பரீட்சையை முடித்துக் கொண்டு வெளியேறிவிடத் துடித்த மூர்த்தி வேண்டா வெறுப் பாக அதனை வாங்கி கோடிடப் பட்ட பகுதிகளை மட்டும் வாசித் தார்.

**செல்வந்த நாடுகள் வறிய நாடுகளில் உள்ளவர்களுக்கு புல மைப் பரிசில்கள் வழங்குவது அந் நாடுகளை அபிவிருத்திசெய்யும் அக் கறையினால் அல்ல.மாறாக சொந்த நலன் கருதியே அவை வழங் கப்படுகின்றன. வறிய நாடுகளின் திறமைசாலிகளை தமது நாட்டிற் பணிபுரிய வைக்கும் அதே வேளை யில் வறிய நாடுகளின் மூளைசாலி களின் எண்ணிக்கை குறைக்கப்படும். அதன் மூலம் அறிவுத்துறையில் அந்நாடுகளின் சுய சிந்தனை மழுங்கடிக்கப்படுகின்றது.**

மேல்நாடுகளின் தேவைக்கேற்ற வகையில் திட்டமிடப்பட்டுள்ள கற்கை நெறிகளை வறிய நாடுகளில் அறிமுகம் செய்து நாட்டின் வளர்ச் சியைத் தடைசெய்கிறார்கள்......''

''நான் போகலாமா'' என்று வெறுப்புக் கலந்த குரலில் கேட்ட வாறே பத்திரிகையை மூர்த்தி மேசையில் வைத்தார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

# சிந்திப்பதற்காக கற்போம்

வாழ்வினை
சுகப்படுத்த வந்த கல்வி
இன்று
சுமையாகி கசப்பதேனோ

தலை நிமிர வழிசெய்யவேண்டிய
கல்வி
இத்தனைப்பெரிய
புத்தக முடைகளை மேல் சுமத்தி
எம் முதுகுகள் அல்லவா
கூனலாய்ப்போகிறது.
விழுந்து விழுந்து
படித்தோம்
எழ முடிந்சதா?
இரவு பகலாகப்படித்தோம்
வெளிச்சத்தைப் பார்த்தோமா?

பாடங்களை மனனம் செய்தோம்
பரீட்சை எழுதுவதற்கா!
பரீட்சை முடிந்ததுமே
படித்ததை மறந்து போனோம்.

தொடர்ந்து பரீட்சைகளுக்கு
தயாரானோம்
வாழ்க்கைப்பரீட்சைக்கு
தயாரிப்பில்லை.

பறப்பதற்கே
சிறகுகள் தேவை
கூண்டுக்குள் வாழ்வதற்கல்ல

கல்வி என்பது
பொன் போன்றதே!
அது பொற்சிறையாகக்கூடாது

படிப்பதைப்பற்றி
சிந்திப்போம்
சிந்திப்பதற்காகவே
படிப்போம்.

—புவனா

## நவீன சமன்பாடு

''இன்றைய இயற்கை அறிவியற் விஞ்ஞான கல்வியில் நம் தமிழ் மாணவர்கள் என்ன 'வெளிச்சம்' காண்கிறார்களோ அதே விதமான 'வெளிச்'சத்தைத்தான் அன்றைய ஆங்கில கல்வி அவர்களுக்குக் கொடுத்தது.

இதை மறுபக்கமாகப் பார்த்தால் முன்னைய ஆங்கிலக் கல்வி இருந்த நிலையில் தமிழ் மாணவரிடம் இன்று இயற்கை அறிவியற் கல்வி அகப்பட்டு அவஸ்தைப் படுகின்றது என்றே சொல்ல வேண்டும்.

இந்த நிலையை மாற்றுவது எப்படி?

இதை மாற்றுவதனால் தமிழ் மக்களிடையே புரையோடியுள்ள இந்தச் சமன்பாட்டை மாற்ற வேண்டும்.

சயன்ஸ் படிப்பு = உத்தியோகம்

உத்தியோகம் = நல்ல சீதனம்

நல்ல சீதனம் = தான் உண்டு தன் குடும்பமுண்டு என்ற சொகுசான வாழ்க்கை முறை.

இப்படி அமைந்து விட்ட இந்த ''அறிவியற் சமன்பாடு'' இன்று நீக்கப்பட வேண்டும்.

ஆயிரக் கணக்கான தமிழரைப் பலி கொடுத்து தமிழ் மக்கள் அகதிகளாக வாழ்ந்து கொண்டிருக்கும் இன்றைய கால கட்டத்தில் கூட இந்தச் சமன்பாடே தமிழ் மாணவர் பெற்றோர் மத்தியில் வேரூன்று உள்ள தென்றால் நாம் வெட்கப்பட வேண்டிய ஒன்றே.''

'பாரதிநேசன்'

திசை - 14. 1. 1989.

## கல்வி உலகில் பாரபட்சம்

கல்விக்கான உலகம் இன்று 2000 மில்லியன் செலவு செய்வதாக கணிக்கப் படுகின்றது. இம் மொத்தத் தொகையில் 1½ வீதமே வளர்முகநாடுகள் என்று கருதப்படுகின்ற ஆசிய, ஆபிரிக்க, அமெரிக்க நாடுகளில் செலவழிக்கப் படுகின்றது. இந்த நாடுகளில் வாழ்கின்ற மக்கள் தொகை உலக மக்கள் தொகையில் 60 வீதமாகும், இந்நாடுகள் மக்கள் வாழ்கின்ற பூகோளப் பரப்பில் ஏறக்குறைய 50 வீதத்தினை அடக்கியுள்ளன. கல்விச்செலவீட்டில் உலகின் பாரபட்சம் எப்படியானது என்பது இதிலிருந்து தெரிகிறதல்லவா?

## தாயக...

(17ஆம் பக்கத் தொடர்ச்சி)

சொருமுறைகூட வருவதில்லை. ஆனால் எமது பணமோ பெரும் பெரும் வீடுகளாகின்றன. நவீன பொருட்களை வாங்கிக் குவிக்கிறது. எமது உறவினர்கள் போதியளவு வாங்க முடியவில்லையே என்பதற்காக ஏங்கிச்சாகிறார்கள். கடந்த நூறுவருடங்களாக இதையே தான செய்து வருகிறோம்.

1920 களில் சிங்கப்பூர் மலேசியா போனோம். 2-ம் உலக யுத்தத்துடன் அங்கிருந்து துரத்தப்பட்டோம். அதன் பின்னர் சிங்கள நாடு சென்றோம். உழைத்தோம் வீடுகட்டினோம். பொருட்கள் வாங்கினோம். அங்கிருந்துங் கூடத் துரத்தப்பட்டோம். அதன் பின்னர் மத்திய கிழக்கென்று ஆரம்பித்து ஐரோப்பா, அமெரிக்கா கனடா, அவுஸ்திரேலியா, என்று போய் நிற்கிறோம். அண்ணன் ஓரிடம், அக்கா வேறிடம். தந்தை முகந்தெரியாப் பிள்ளைகள்: கணவன் இருந்தும் இல்லாது வாழும் மனைவிகள்: அநாதை போல் அல்லலுறும் வயோதிபப் பெற்றோர்கள்...ஐயய்யோ...எத்தனை சிதைவுகள் ... எத்தனை குமுறல்கள் ... ஏன் இந்த தீராச் சோகம்? எமது மண்ணின் ஜனத் தொகைப் பெருக்கத்தாலும், தொழில வாய்ப்பின்மையாலும ஆக்கத்திறனிலலா, சிலவேளைகளில மனச்சாட்சிக்கு விரோதமான தொழில்களிலும்கூட ஈடுபடுகிறோம் ஏன் இந்த அவலம்?

ஜப்பான், சிங்கப்பூர், மலேசியா, ஹொங் ஹொங், தென் கொரியா, தாய்லாந்து, இந்தோனேசியா, சீனா இதையெல்லாம் சற்று நோக்குங்கள். தமது கல்வியால் தமது சொந்த தேசத்தின் சமூக பொருளாதாரத்தை வளர்க்கிறார்கள். புதிய புதிய தொழில வாய்ப்புகளைத் தமது சொந்த நாட்டிலேயே ஏற்படுத்திக் கொள்கிறார்கள். இதன் மூலம் தமது கல்வித் தரத்தையும் வளர்த்துக் கொள்கிறார்கள். அந்நிய தொழில் நுட்பத்தில தொழில் புரிய தாம் தமது மண்ணைவிட்டுப் பிரியவில்லை. குடும்ப சிதைவைத் தாங்கி அழவில்லை. ஆன்ம கௌரவத்தை இழந்து செல்லரித்த ஆன்மாவுடன் நடைப்பிணமாகவில்லை. மாறாகப்போலி அந்நிய தொழில் நுட்பத்தை தமது மண்ணுக்கு அழைப்பதில் வெற்றி பெற்று வருகிறார்கள். இவற்றில் பல நாடுகள் அந்நிய தொழிலாளர்களுக்குக் கூட வேலைவாய்ப்புக் கொடுக்கின்றன. தமது வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்துகிறார்கள். தமது தேசத்தின் சமூக பொருளாதார கட்டுமானத்தையும் உயர்த்துகிறார்கள். நாமோ சர்வதேச அடிமைகளாய் அலைந்து திரிகிறோம்.

ஏன் இந்த நிலை. நாம் தொழில் நுட்ப திறன் அற்றவர்களா? புத்திக் கூர்மை இல்லாதவர்களா? இல்லவே இல்லை. புத்திக்கூர்மையில் சராசரி ஆசியனிலும் கூட நாம் சற்று உயர்ந்தவர்களாகவே உள்ளோம். தொழில் நுட்ப திறனிலும் நாம் சளைத்தவர்கள் அல்ல அப்படியானால் எம்மிடம் இல்லாதது எது!

சமூக - பொருளாதாரத்தை நிலை ஊன்றச் செய்வதற்கு எமக்கோர் தேசம் இல்லை. அது தான் எமது மூலப்பிரச்சனை. எமது பொருளாதாரத்தை நாம் எமது மண்ணிலிருந்து பெறவேண்டும். இந்தமண — எங்கள் சொந்த மண் எமது பொருளாதார வாய்ப்புக்களைப் பெற்றுத்தரும் சொர்க்க புரியாக மாற வேண்டும். எமது சொந்த மண்ணை சொந்த தேசமாக மாற்றுவதா மூலமே எம்மால் இதைச் சாதிக்க முடியும்.

இந்த மண்ணை, எமது சொந்தத்தேசமாக மாற்று துதான் மாணவர்களின் எதிர்கால பிரச்சனைகளின் திறவு கோலாகும். இது வரலாறு எமக்கிடும் பாரிய கடமையாகும்.

- லோகன்


## மனம விட்டு...

(12ஆம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்ப்பால் பருவ வயதினர் சகஜமாய் பழகுதல், சரிசமனாக பழகுதல் என்பது பால் உணர்வுகளைத் தூண்டக்கூடாத முறையில் அமையவேண்டும். ஒத்தபாலார் சகஜமாக பழகுதல் என்பதுவும் எதிர்பாலார் சகஜமாகப் பழகுதல் என்பதும் பல வேறுபாடுகளைக் கொண்டது என்பதைமட்டும் என்றும் மறவாதிருந்தால் போதும். எதிர்பாலார் சகஜமாகப் பழகக் கூடாது என்பதல்ல. வேறுபாடுகளைக் கணக்கிற் கொண்டு சகஜமாகப் பழகவேண்டும். வேறு பாடுகளைக் கணக்கில் கொள்ளாது பழகும் தன்மை உன்னிடம் இருந்தால் அதைத் திருத்திககொள். அவ்வளவும் போதுமானது. ஆனால் சகஜமாய் பழகும் தன்மையை மட்டும் கைவிட்டு விடாதே.

இங்ஙனம்
நண்பன்
குதம்பசித்தர்

# ஓவியம் வாக்கியம்





இங்கு காணப்படும் இரு ஓவியங்களுக்கும் தொடர்பிருக்கிறது. இதனை அவதானித்து இதற்குப் பொருத்தமான வாக்கியமொன்றை எழுதி அனுப்பவும்.

கூடியது ஆறு வரிகளுக்கு மேற்படாமல் வாக்கியம் அமைய வேண்டும்.

இவை கவிதை வரிகளாகவும் அமையலாம்.

N. Athavan    தெணியான் செல்வன்.    N. Athavan

தெணியான் செல்வன்

'வெளிநாட்டு மூலப்பொருட்களை நிராகரித்து
உள்ளூர் மூலப்பொருட்களை பயன்படுத்துவோம்.'

- ☐ பனை வெல்லம்
- ☐ பனஞ்சீனி
- ☐ கல்லாக்காரம்
- ☐ புழுக்கொடியல் மா
- ☐ ஒடியல் மா
- ☐ பாணிப்பனாட்டு
- ☐ பனம் அல்வா
- ☐ பனம் சொக்கலற்
- ☐ பனம் மஸ்கற்
- ☐ பனம் மிக்ஸர்
- ☐ பனம் லட்டு

35.90
4.40
40.30

50.30

35.90
4.40
31.50

மொத்தமாகவும்
சில்லறையாகவும்
கிடைக்கும் இடம் :-

# உதயம் பல்பொருள் அங்காடி

**ஸ்ரான்லி வீதி, ஆரியகுளம் சந்தி,**
**யாழ்ப்பாணம்.**

மேலதிக விபரங்களுக்கு:

## பனை தென்னை வள அபிவிருத்தி ஒன்றியம்

25, பொன்னப்பா ஒழுங்கை,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்